
# காஞ்சி



விலை 20 காசு

4-5

27-8-67

# படித்த பெண்?

—[ பட்டப்பா ]—

மல்லிகைப்பூவினை நிறைய வாங்கித் தலையில் சூடிக்கொண்ட பொன்னியின் செல்வி கண்ணாடி முன் தன் அழகினைப்பார்த்தாள்! மை தீட்டிய விழிகள்! கறுத்து அடர்ந்து வளர்ந்த கூந்தல், இரு நாகங்களாக நீண்டு புரளும்போது அவற்றினைப்பிடித்து விளையாடும் அழகான கைகள்.

நிறம் சிகப்புதான்.

பற்கள், சிரித்தால்......

பளீரென்று ஒளியுமிழும்.

படித்தவள்.

வழக்கறிஞர்; பின் என்ன?

அவள் இன்று சமுதாயத்தைப் புரிந்துக் கொண்டிருந்தாள்.

நேற்றுவரை இந்தச் சமுதாயம் என்ன சொல்லிக்கொண்டிருந்தது?

ஆண்!

அவன் உயர்ந்தவன். பெண் அவனைவிட மதிப்பில் குறைவுதான்.

திருமணமானால் அவனுக்கு முழு கௌரவம். அதாவது பெண் மரியாதைக் குறைவாக வாழ்நாளைக் கழிக்கவேண்டும்.

சகிக்கமுடியுமா?

பார்த்தாள்.

இன்று

அவள்!

'வாருங்கள், போங்கள்! நீங்கள் தான் அம்மா!'

எவ்வளவு குளிர்ச்சியான மரியாதை வார்த்தைகள்!

திருமணம் செய்து கொண்டால் அவரும் இப்படித்தானே அழைக்க வேண்டும்!

ஆனால் ஏன் மாறுதல்?

அது அவளுக்குக் கசப்பாகத் தோன்றியது.

ஆகவே கலியாணத்தைச் செய்துக்கொள்ள நாட்களைக் கடத்தினாள்

ஓர் நாள்!

"திருமதி பொன்னியின் செல்வியைப் பார்க்க வந்திருக்கிறேன்!"

"நான்தான்!"

"அப்படியா? வணக்கம்!"

"வணக்கம்!"

"அதாவது ஒரு சிறு வழக்கு!"

"சொல்லுங்கள்!"

"என்னுடைய வேலையாளை அடித்துவிட்டார்கள் ஊரில் சிலர். அவர்களைத் தண்டிக்கவேண்கிம்!"

"அப்படியா!"

"என்ன. விவரமாகச் சொல்லுங்கள் கேட்போம்."

"நான் ஒரு நிலச்சுவான்தார்! எனக்குப் பெருங்குடிலில் நன்செய், புன்செய் நிலங்கள் இருக்கின்றன. அதில் ஒரு வேலையின் பொருட்டுச் சென்ற வேலையாளை அடித்துவிட்டனர். காவல் நிலையத்தில் கூறி அவர்களைச் சிறைப்படுத்தியிருக்கிறேன். வழக்கு மன்றத்தில்வாதாடி அவர்கள் தண்டனை பெறும்படி செய்யவேண்டும்!"

'நீங்கள் பதிலுக்கு அடிக்கவே இல்லையா?"

"இல்லை!"

"அவர்கள் அடிக்க காரணம்?"

"பொறுமைதான்!"

"உங்கள் வேலையாள் வாயாடவில்லையா!"

"வாயாடவேண்டிய அவசியம் இல்லை!"

"அப்படியா! நல்ல வழக்குதான்! ஏற்றுக்கொள்கிறேன்! அது சரி. உங்களுக்குச் சாட்சிகள் உண்டா?"

'இருக்கிறார்கள்!"

"உண்மையான சாட்சிகளா?"

"உண்மையான சாட்சிகள்!"

"இந்த இதில் கையெழுத்துப் போடுங்கள்!"

வந்திருந்த அவன் கையெழுத்துப் போடும்போது பொன்னியின்செல்வி அவனுடைய அழகைக் கவனிக்க ஆரம்பித்தாள்.

உண்மையிலேயே நல்ல அழகாக இருந்தான்.

அறிவு!

அதுதான் பேசும்போதே ஒளிவீசுகிறதே!

படிப்பு!

அதை விசாரிக்க வேண்டும்!

'உம்!'

எதற்கோ பொன்னியின் செல்வி யோசித்தாள்!

'சரி, நீங்கள் என்ன படித்திருக்கிறீர்கள்?"

கையெழுத்திட்ட அவன், "நானு ...புதுமுக வகுப்பு தேறியுள்ளேன்!"

"அப்படியா ரொம்ப சரி!" என்று கூறிய பொன்னியின் செல்விக்கு அவன் அடக்கமான அழகுடையவன் என்ற உணர்வு ஏற்பட்டது.

'ஏதாவது பணம்......" அவன் வினயமாகக் கேட்டான்.

"இருபது ரூபாய் கொடுங்கள்!"

உடனே இரண்டு பத்து ரூபாய்த் தாள்களைக் கொடுத்தான் அவன்.

வழக்கு மன்றத்தில் வழக்கு நடக்க ஆரம்பித்தது.

முதல் வழக்கு!

பொன்னியின் செல்வி வெற்றி பெற்றாள்.

"நீங்கள் நிரம்பவும் பாடுபட்டீர்கள்!"— அவன்.

முறுவலித்தாள் அவள்.

காலம் சென்றது.

அவளுக்கும், அவனுக்கும் அடிக்கடி சந்திப்புகள் ஏற்பட்டன.

ஓர் நாள்!

'நீ எங்கே போய்விட்டு வருகிறாய்?" அவன் கேட்டான்.

உடனே பொன்னியின் செல்விக்குக் கோபம் வந்தது.

'மரியாதை ஏன் குறைந்துவிட்டது?" என்று கேட்டாள்.

'ஓ மறந்துவிட்டேன்! நீங்கள் எங்கே போய்விட்டு வருகிறீர்கள்?"

அவளுக்கு அவன் மன்னிப்பு கேட்கிறார்ப்போல் பேசியது கோபத்தைத் தணித்தது.

"சினிமாவுக்கு!"

'அப்படியா! நன்றாக இருக்கிறதா?"

'சுமார்!"

அதன்பிறகு பொன்னியின்செல்வி தீவிரமாக யோசிக்க ஆரம்பித்தாள்.

கணவனும் இப்படித்தான்கோபத்தால் மன்னிப்பு கேட்கிறார்ப்போல் மரியாதை செலுத்துவானா!

"அடடா, என்ன அனுபவக் குறைவாக இருந்துவிட்டேன்!"

மீண்டும் ஓர்நாள் அவனைச் சந்தித்தாள்.

அவள் கேட்டாள், "நீ எங்கே போய்விட்டு வருகிறாய்?"

அவன் சற்றுத் தயங்கிவிட்டு சிரித்துக் கொண்டே, "ஓட்டலுக்கு! டிபன்கள் நன்றாகவேயில்லை!" என்றான்.

"ஓகோ!"—அவள்

காலம் ஓடியது.

இப்போது திருமணம் செய்துக் கொள்ள விருப்பமுடையவளாக இருந்தாள்.

யாரை?

அவனைத்தான்!

திருமணம் இருவருக்கும் நடந்தேறியது.

பலமுறை அவனை 'நீ'யாக அழைத்துப்பார்த்தாள்.

அவள் போக்கை அவள் ரீதியாகவே விட்டு மாற்றிவிட்டான்,

இப்பொழுது.........

'நீங்கள் எங்கே போகிறீர்கள்!"

என்று கேட்டாள்.

"நண்பர்கள் கழகத்திற்கு!"

என்று பதில் வந்தது.

காஞ்சி

ஆண்டுசந்தா ரூ 10    ஆறுமாதம் ரூ 5

மலர் 4    27 8 67    இதழ் 5

# தானாகவே அடங்குமா?

அகிலபாரதம் அமைத்து, அதன் மூலம் இந்தியத் துணைக்கண்டத்தையே இந்தித் துணைக்கண்டமாக ஆக்கிவிடத் துடிதுடித்துச் செயல்பட்டுவரும் மத்திய அரசின் பிடியிலுள்ள அந்த மாநகரத்தில்தான் இந்த அச்சுறுத்தல் விடப்பட்டுள்ளது.

பம்பாய் நகரத்தில் தமிழ்ப் பெருங்குடி மக்கள்—குறிப்பாகத் தென்னாட்டார்—பல தரப்பட்ட பணிகளிலும், வாணிபங்களிலும் ஈடுபாடுகொண்டு, தங்கள் வயிற்றைக் கழுவிக்கொள்ள வேண்டிய நிலையிலிருக்கிறார்கள்.

அங்குதான் கடந்த இரண்டு ஆண்டுக்காலமாக தென்னாட்டவர்க்கு எதிராக—'சிவசேனா' என்ற சீற்றங் கொண்ட இயக்கம், தன் குறுகிய புத்தியைக் காட்டி, அடிக்கடி கேவலமான முறையில் நடந்துகொண்டு வருகிறது.

அந்த நகரத்தில் வாழும் தென்னக மக்களுக்கு உயிருக்கோ—அவர் தம் உடைமைக்கோ எந்தப் பாது காப்பும் அற்ற முறையில் நாளின் ஒவ்வொரு மணி நேரத்தையும் அச்சம் கப்பிய நிலையில் கழித்துக்கொண்டிருக்கவேண்டிய சூழ்நிலை, சிவசேனா' இயக்கத்தால் உண்டாக்கிவிடப்பட்டுள்ளது, நாட்டின் பெரும் பகுதி மக்களின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

காங்கிரசாரின் தீவிரமான ஆதரவு இந்த இயக்கத்துக்கு உண்டு என்று கூறப்படுவதற்குச் சான்றாக, அண்மையில் நடைபெற்ற ஒரு இடைத் தேர்தலில் போட்டியிட்ட இந்த இயக்க வேட்பாளரை எதிர்த்து காங்கிரஸ் தன் வேட்பாளரை நிறுத்தவில்லை என்று எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

சில திங்களுக்கு முன், இந்த இயக்கம் பற்றிய தன் கருத்தை அறிவித்த துணைப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாய், அதன் இழிவான நடவடிக்கைகளை ஊக்குவிக்கத் தக்க முறையில் விவரித்தார்.

அண்மை நாட்களில் இந்த இயக்கத்தின் அஞ்சத் தக்க நடவடிக்கைகள் அளவு கடந்துவிட்டிருக்கின்றன.

பம்பாய் நகரத்திலிருந்து வெளிவருகின்ற 'பிரிபிரஸ் ஜர்னல்' என்ற ஏடொன்றில்,

WARNING MADRASI,

If you are not leaving Maharashtra, before 1st October' 67, you must be killed on 2—10—'67 at 1 A. M.

TAKE THIS SERIOUS

—Sivasena.

என்ற அறிவிப்பைக் கொண்ட புகைப்படம் ஒன்று வெளியிடப்பட்டுள்ளதெனவும் இது சிவசேனை இயக்கம், பம்பாய் நகரத்திலுள்ள ஒவ்வொரு தமிழருக்கும் தனித்தனியே அனுப்பப்பட்டுள்ள கடிதத்தின் நகல் பிரதி என்றும் செய்தி வெளியிட்டுள்ளது.

மதராசிகளே! எச்சரிக்கை!

'67 அக்டோபர் முதல் நாளைக்குள் நீங்கள் மகாராட்டிரத்தைவிட்டுவெளியேறாவிட்டால் 2-10-67 நள்ளிரவு 1 மணிக்கு நீங்கள் நிச்சயம் கொல்லப்படுவீர்கள்.

இதனை எச்சரிக்கையாய்க்கொள்ளவும்.

—சிவசேனா

என்று பொருள் தருகின்ற அறிக்கை அது. அதுமட்டுமல்ல. அந்த ஏடு தன் செய்திக் குறிப்பில்,

Letters of this kind have been received by large numbers of Bombay residents.

என்றும் சுட்டிக்காட்டியுள்ளது. அதாவது—

இவ்வகைக் கடிதங்களை பெரும்பான்மையான பம்பாய் வாசிகள் (தமிழர்கள்) பெற்றிருக்கிறார்கள்.

என்று தெரிவிக்கிறது.

மகாராஷ்டிர மாநிலத்தைவிட்டு வெளியேற நாள் குறிப்பிட்டு, தவறினால் எப்போது என்ன நடக்கும் என்றும் திட்டவட்டமாக அறிவித்துள்ளது அந்த அறிக்கை—அதனை அனுப்பியுள்ள இயக்கம்.

கொலை வெறி கொண்ட இந்த அறிக்கையில் உள்ளபடி அந்த இரத்த வெறியர்கள் நடந்துகொள்ள மாட்டார்கள் என்பதற்கு ஆதாரம் ஏதுமில்லை.

இப்போதே அங்கு பெண்களின் கற்பு சூறையாடப் படுகின்றது, தமிழர்களின் கடைகள் கொள்ளையிடப் படுகின்றன. குடிசைகள், இருக்கைகள் தீக்கிரையாகிக் கொண்டு வருன்றன. திடீர் திடீரென்று எதிர்பாராத முறையில் தாக்கப்படுகிறார்கள் அங்கே!

தொடர்புடைய மாநில காங்கிரஸ் தலைவர்களுடைய பேச்சும், மொரார்ஜி போன்றவர்களுடைய பேச்சும் வேறு சில மாநிலங்களில் காங்கிரஸ் கட்சி நடந்துகொள்கிற முறையையும் ஒப்பு நோக்குகிறபோது, காங்கிரசே 'சிவ சேனை' இயக்கத்தை நடத்துகிறதோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. உள் துறை அமைச்சர் திரு. சவாண் அவர்களது நல்லாசியும் இந்த இயக்கத்திற்குச் சித்திக்கப் பெற்றிருக்கிறது என்றும் கூறப்படுகிறது. மக்களவை உறுப்பினர் திரு. லோக்நாத் மிஷ்ரா இதனை உறுதிப்படுத்துகிறார்.

மக்களாட்சி முறை நடைபெறுகின்ற ஒரு நாட்டில் கொலை வெறி எச்சரிக்கைகள், ஒரு இயக்கத்தின் பேரால் விடுக்கப்படுவதனையும், அதுபற்றி அந்த மாநில அரசு வாய்மூடிக் கிடப்பதும் நமக்குப் பெருவிந்தையாகவே இருக்கிறது.

ஆனால் நடவடிக்கைகளை உன்னிப்பாகக் கவனித்து வருவதாகக் கூறிவரும் பிரதமர் இந்திரா காந்தி அவர்கள்,

பல்வேறு தரமான சமூக, பொருளாதார நிலைகளில் உள்ள மக்கள் வாழக்கூடிய ஒரு நாட்டில், இதுபோன்ற பதட்ட நிலைகள் தோன்றத்தான் செய்யும்.

என்று கருத்தறிவிக்க வருகிறார் என்றால், அவரைப்

(12-ம் பக்கம் பார்க்க)

# இது பாவம்!

—புலவர் பொன்னிவளவன்—

இளம்பருவத் தோழியரே! என்னைப் போல
இருப்போரே! உங்களுக்கோர் எச்ச ரிக்கை!
உளம்வெந்து துடிக்கின்றேன்! சாகும் முன்னால்—
உதிர்க்கும்கண் ணீர்த்துளிகள் காயும் முன்னால்
வளமாக இருக்கின்ற உங்க ளுக்கு
வழங்குகின்றேன் அறிவுரைநான்! பெண்க ளென்றால்
இளக்கார மாய்ப்பேசும் இந்த நாட்டை
எடைபோட்டுப் பார்த்ததனால் சொல்லு கின்றேன்!

அலங்காரம் செய்யாதீர்; உங்கள் வாழ்க்கை
அலங்கோல மாகிவிடும்! அழகாய் நீங்கள்
விளங்காதீர்! உங்களது வாழ்க்கை வீணாய்
விளங்காமல் கெட்டழியும்! சத்தம் போட்டு
முழங்காதீர்! முழக்கமெல்லாம் அழுகை யாகி
முடிந்துவிடும்! எப்போதும் புன்சி ரிப்பை
வழங்காதீர்! வாலிபரைக் கவர்ந்தி முத்து
வாழ்க்கைக்கே அதுமுற்றுப் புள்ளி வைக்கும்!

பிறவியிலே நான்அழகு பூவைப் போல!
பெரியவளாய் நான்ஆன பருவ நாளில்
துறவியையும் மயங்கவைக்கும் அழகி யாகத்
தோற்றமளித் தேன்!எனக்கு வாழ்க்கை தன்னில்
உறவென்றால் பட்டாடை நகைதான்! அந்த
உறவோடு விளையாடி நடந்து சென்றால்
தெருவினிலே செல்கின்ற ஆண்க ளெல்லாம்
திருட்டுவிழி யால்என்னை விழுங்கு வார்கள்!

ஆட்டத்தில் மயில்தன்னைத் தோற்க டிப்பேன்!
அரும்புமுல்லை தோற்றுவிடும் சிரிக்கும் போது!
பாட்டினிலே குயில்தோற்றுப் போகும்! கோவைப்
பழம்தோற்கும் என்னுடைய உதட்டின் முன்னால்!
தோட்டத்து மாங்கனிஎன் கன்னத் தின்முன்
தோற்றுவிடும்; தலைகுனியும்! ஓவி யன்கை
தீட்டாத ஓவியம்நான்! ஆண்கள் யாரும்
தீண்டாத இளங்கன்னி யாயி ருந்தேன்!

கொஞ்சுதற்கும் கூப்பிட்டுப் பேசு தற்கும்
குளிர்முத்தம் தா!என்று இழுத்த ணைத்துக்
கெஞ்சுதற்கும் துடிக்கின்றோம் என்று கண்ணால்
கதைகதையாய்ச் சொன்னார்கள் ஆண்கள்! ஆசை
நெஞ்சுக்குத் தடைபோட்டு அடக்கிப் பார்த்தேன்!
நின்றிடுமா தடையெல்லாம் உடல்கொ முத்தால்?
அஞ்சாமல் ஒருவனைநான் உற்றுப் பார்த்தேன்;
அவன்எனது பார்வையிலே மயங்கி விட்டான்!

"புத்தகங்கள் இருக்கிறதா படிக்க?" என்று
போய்க்கேட்டேன் ஒருநாள்நான்! எடுத்துத் தந்தான்!
நித்தநித்தம் போவேன்நான்! கதைய ளப்பேன்!
நெருங்கிஅவன் அருகினிலே அமர்ந்தி ருப்பேன்!
எத்தனைநாள் அவன்பொறுப்பான்? ஒருநாள் என்னை
இழுத்தணைத்தான்! இதழோடு இதழைச் சேர்த்தான்!
முத்தமிட்டான்! கொத்திவிட்டான் கற்பை! வாழ்வில்
முழுநிலவைப் போல்நானும் களங்கம் பெற்றேன்!

எத்தனையோ உறுதிமொழி எனக்குச் சொன்னான்!
எவ்வளவோ மனக்கோட்டை கட்டி வந்தேன்!
அத்தனையும் தவிடுபொடி யாக்கி விட்டான்!
அவன்இன்றோ இன்னொருத்தி கணவன் ஆனான்!
ஒத்திகையை என்னிடத்தில் நடத்திப் பார்த்தான்;
ஊரறியும் அரங்கேற்றம் அவளி டத்தில்!
எத்திவிட்டான் அவன்தப்பா? எனது தப்பா?
இருவருமே செய்திட்டோம் பருவத் தப்பு!

தப்புசெய்யும் ஆண்களைத்தான் இயற்கை என்றும்
தப்பவைத்து விடுகிறதே! வயிறு வீங்கி
அப்பாவும் அம்மாவும் தெரிந்து கொண்டு
அதன்பிறகு ஊரார்க்குத் தெரிய வந்து
கப்பலிலே பெண்மானம் ஏறும்! சின்னக்
கைக்குழந்தை அவமானச் சின்னம் தோன்றும்!
அப்போது நான்மயங்கிக் கிடந்தேன்; இன்றோ
'ஐயையோ!' எனவிழித்துப் புலம்பு கின்றேன்!

கதறுகின்றேன்! கண்ணீரைக் கொட்டு கின்றேன்!
காமத்தால் கருத்திழந்து போன நானே
பதறுகின்றேன்! துடிக்கின்றேன்! இந்தப் புத்தி
பழகுகையில் இருந்திருக்க வேண்டும் என்று
உதறுகின்றான் அவன்என்னை! நானும் இன்று
உதறுகின்றேன் உயிர்வாழும் ஆசை தன்னை!
இதற்காநான் பிறந்திட்டேன்? என்போல் தப்பு
இளம்பருவக் குமரிகளே! செய்தி டாதீர்!

இறப்பதன்முன்—கையிலுள்ள நச்சுக் கோப்பை
என்உதட்டைத் தொட்டிடுமுன் சொல்லு கின்றேன்!
சுறுசுறுப்பில் துடிதுடிப்பில் சிரிப்பில் பேச்சில்
சொல்லமுடி யாதவெளிப் பகட்டிலெல்லாம்
விறுவிறுப்பாய் இருந்தவள்நான்! என்வ யிற்றில்
விளைந்துள்ள கருவயதோ ஆறு மாதம்!
வெறுப்போடு என்பேச்சை ஒதுக்க வேண்டாம்!
வேண்டாமே உங்களுக்கும் ஆறு மாதம்!

# இணைப்பு மொழிச் சதி?

# ஆங்கிலத்தின் அந்தஸ்து;

## கழக அரசின் கருத்தோட்டம்!

வட்டார மொழிக்கு முதல் முக்கியத்துவம் அளிப்பது என்ற திட்டத்தின் கீழ் 5 அல்லது பத்து ஆண்டுகளில் ஆங்கிலத்தை அகற்றிவிட்டு—அதன் பிறகு அந்த இடத்தை இணைப்பு மொழியாக்கி இந்தியையே இந்தியத் துணைக்கண்டத்து ஆட்சிமொழியாகவும்—ஆக்கிவிடத் திட்டம் தீட்டியுள்ள மத்திய அரசுக்குத் தமிழக அரசு தனது எச்சரிக்கையை, கருத்தினை அறிக்கை மூலம் அறிவித்திருக்கிறது.

ஆங்கிலமே தொடர்ந்து இந்தியத் துணைக்கண்டத்தின் இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் எனவும், எவ்வளவு காலத்துக்கு அவசியமோ அவ்வளவு காலத்துக்கும் ஆங்கிலமே நீடித்திருக்கக்கூடிய விதத்தில் மத்திய அரசின் மொழிக் கொள்கை நீடிக்கப்படவேண்டும் என்பதே தமிழக அரசின் உறுதியான கொள்கையாகும் என்பதை அந்த அறிக்கைச் சுட்டிக் காட்டியுள்ளது.

அறிக்கையின் முழு விபரம் வருமாறு:—

*

(1) தாய் மொழி கட்டாயமான முதல் மொழியாக இருக்கும்.

(2) ஆங்கிலம் கட்டாயமான இரண்டாவது மொழியாக இருக்கும்.

(3) எல்லாப் பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் இந்தி இஷ்ட பாடமாக இருக்கும்.

கல்வித் துறையாளர்களுடன் மட்டுமின்றி சட்டசபை மெம்பர்களுடனும் விரிவான விவாதங்கள் நடத்தியும், மொழி கமிஷன், முதல் மந்திரிகள் மாநா, ராஜ்ய கல்வி ஆலோசனை கமிட்டி போன்றவைகளில் தெரிவிக்கப்பட்ட அபிப்ராயங்களைக் கருத்தில் கொண்டும் மேற்கண்ட மொழிக்கொள்கைவகுக்கப்பட்டது. இதை மாற்ற வேண்டுமானல் அதற்கு மிகவும் கண்டிப்பான காரணங்கள் இருக்கவேண்டும். மேற்கூறிய கொள்கையில் ஏதாவது மாறுதல் செய்யப்படுவதானல், அது மற்ற ராஜ்யங்களைவிட சென்னை ராஜ்யம் பிரதிகூலமான நிலைமையில் இருக்கும்படி செய்வதாக இருக்கக்கூடாது.

பள்ளிக்கூடங்களில் ஆங்கிலம் கட்டாயமான இரண்டாவது மொழியாக இருக்கவேண்டுமென்று எல்லா ராஜ்ய சர்க்கார்களும் முடிவு செய்தால், நாடு பூராவிலும் ஆங்கிலம் நல்லமுறையில் தொடர்ந்து கற்றுக் கொடுக்கப்படுவதற்கு வசதியிருக்கும். இந்தியாவின் பல்வேறு பகுதிகள் ஒன்ருெடொன்று தொடர்பு வைத்துக்கொள்வதற்கான மொழியாகவும் அது நீடிக்கும்; ஆகவே கூட்டு ஆட்சி மொழியாகவும் அதைப் பயன்படுத்திக்கொள்ள முடியும்.

யூனியன் கல்வி இலாகா இப்போது வகுத்துள்ள திட்டத்தின் மீது ராஜ்ய சர்க்கார் தனது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கும்போது நோக்கங்கள் பற்றிய விஷயத்தில் தெளிவாக இருக்கவேண்டியது அவசியமாகும். நல்ல வேளையாக அவர்களுடைய குறிப்பில் நோக்கங்கள் மிகத் தெளிவாக இருக்கின்றன.

(1) நாட்டின் இணைப்பு மொழிகள் பலப்படுத்தப்பட வேண்டும்.

(2) பள்ளிக் குழந்தைகள் மீது அளவுக்குமீறி மொழிகளைச் சுமத்தக்கூடாது.

முதலில் எது இணைப்புமொழியாக இருக்கவேண்டுமென்பதை பற்றித் தெளிவாக இருக்கவேண்டும். இணைப்பு மொழி விஷயமாக இறுதியில் என்ன முடிவு எடுத்துக்கொள்ளப்பட்டாலும், அது ஒரு ராஜ்யம் மற்ருெரு ராஜ்யத்தைவிட பலவீனமான நிலைமையில் இருக்கும்படி ஏற்படக்கூடாது. அல்லது ஒரு சில ராஜ்யங்கள் இந்தியாவிலுள்ள மற்ற ராஜ்யங்களைவிட அனுகூலமான நிலைமையில் இருக்கும்படியாகவும் இருக்கக்கூடாத. நாட்டில் பல பிரிவினர் இருக்கிருர்கள். ஒவ்வொரு பிரிவும் வெவ்வேறு மொழியைப் பேசுகிறது. அது அவர்களுடைய தாய் மொழி. இவற்றில் மிகப் பெரியது இந்தி பேசுவோர் பிரிவு. இந்திய சமுதாயத்தில் இது மூன்றில் ஒரு பங்குக்கு சிறிது அதிகமாகவே இருக்கிறது. இந்திய யூனியனில் இது ஒரு மொழிவாரி மைனுரிட்டியாகும். இந்தியாவில் உள்ள மற்ற மொழிப் பிரிவினரில், அமைப்பு, லிபி முதலியவைகளில் இந்தியைப் போன்றே இருக்கும் வேறு மொழிகளைப் பேசுபவர்கள் பலர் இருக்கிருர்கள். இவை 'ஆரிய' மொழிகள் எனப்படும்; மற்ற 'திராவிட' மொழிகளிலிருந்து இவை மாறுபட்டவை. பெரும்பாலான ஆரியமொழிகளுக்கு மூலம் சமஸ்கிருதமாகும். இந்தி, மராத்தி, வங்காளி, குஜர்ாத்தி, பஞ்சாபி, ஒரியா, அஸ்ஸாமிய, காஷ்மீரி மொழிகள் இந்த ஆரிய மொழிகளைச் சேர்ந்தவையாகும். தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் ஆகியவை திராவிட மொழிகளாகும். இந்தியாவின் ஜனத் தொகையில் சுமார் நாலில் ஒரு பகுதியினர் திராவிட மொழிகளையும் மற்றவர்கள் ஆரிய மொழிகளையும் பேசுகிருர்கள்.

எது இந்தியாவின் இணைப்பு மொழியாக இருக்கவேண்டுமென்பதைப் பரிசீலனை செய்யும்போது ஒரு விஷயத்தை கவனிக்க வேண்டும். அதாவது, மைனுரிட்டி பிரிவில் உள்ள திராவிட மொழிகள், மெஜாரிட்டியான ஆரிய மொழிகளைவிட பிரதிகூலமான நிலைமையில் இருக்கும்படி விடக்கூடாது. இந்தியா

வின் மொழிப் பிரச்னை பற்றி சென்னை சர்க்கார் மொழி கமிஷனரிடம் சமர்ப்பித்த ஒரு யாதாஸ்தில், இந்திய யூனியனின் 'தேசிய மொழி' வேறு, 'ஆட்சி மொழி' வேறு என்று பாகுபாடு செய்து காட்டப்பட்டிருக்கிறது. இந்திய யூனியனின் 'ஆட்சி மொழி' ஹிந்தி என்று அரசியலமைப்பு சட்டத்தில் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அது இந்தியாவின் 'தேசிய மொழி' என்று அறிவிக்கப்படவில்லை இந்திய சமுதாயம் எப்போதுமே பல மொழிப் பிரிவினர் கொண்டதாக இருந்து வந்திருக்கிறது; இனியும் தொடர்ந்து அப்படித்தானிருக்கும். இந்தியாவின் கலாசார பாரம்பரியம் எந்த நாளும் பெருமைப்படக்கூடிய ஒன்றாகும். ஆகையால், இந்தியப் பிரஜைகளில் எந்தப் பிரிவினரும் பேசும் எந்தத் தாய்மொழியும் இந்திய தேசிய மொழிகளில் ஒன்று என்று குறிப்பிடப்பட வேண்டும்.

1947 ஆகஸ்டு 15உடன் இந்தியாவில் ஆங்கிலேயர் ஆட்சி முடிவடைந்தது. ஆனால், நூறு வருஷங்களாக அவர்கள் உருவாக்கி வந்துள்ள நிர்வாக இயந்திரம் எந்த தடங்கலும் இல்லாமல் தொடர்ந்து இயங்கிக்கொண்டிருக்கிறது. இதில் ஆங்கிலமே முக்கிய கருவியாக இருந்தது. சட்ட விஷயங்களுக்கு ஆங்கிலம்தான் அங்கீகரிக்கப்பட்ட மொழியாகும். எல்லா சட்டங்களும் ஆங்கிலத்தில்தான் பதிவு செய்யப்படுகின்றன. யூனியன் சர்க்காரின் நிர்வாகத்திற்கும் ஆங்கிலமே அங்கீகரிக்கப்பட்ட மொழியாகஇருக்கிறது. இந்தியாவின் உயர்தர கல்வியும் ஆங்கிலத்தில்தான் போதிக்கப்படுகிறது. இக்காரணங்களை முன்னிட்டு செகண்டரி பள்ளிகளில் ஆங்கிலம் கட்டாயபாடமாக இருந்துவருகிறது சுருங்கச் சொன்னால், இப்போதுள்ள ஒரே அகில இந்திய மொழி (அல்லது இணைப்பு மொழி) ஆங்கிலம்தான். உண்மையான கேள்வி இதுதான்.

1. ஆங்கிலம்தொடர்ந்து அகில இந்திய மொழியாக இருக்குமா?

2. யூனியன் சர்க்காரிலும், ராஜ்யங்களிலும் ஆங்கிலம் முக்கிய மொழியாக இருப்பது நின்றுவிட்டால் பல்வேறு தேசிய மொழி பிரிவினரும் ஒருவரோடொருவர் தொடர்பு வைத்துக் கொள்ளுவதற்கென்று ஏதாவது ஒரு மொழி இருக்குமா?

இந்தக் கேள்விகளுக்கு சென்னை சர்க்கார் தெளிவான பதில்களைக் கொடுத்திருக்கிறார்கள். அகில இந்திய மொழி அல்லது இணைப்பு மொழியாக இருக்கக்கூடியது ஆங்கிலம் ஒன்றுதான்; பல்வேறு பிரிவுகளையும் இணக்கமாக ஒருமைப்படுத்துவதற்கு உபயோகப்படக்கூடிய பொதுமொழியும் ஆங்கிலம்தான். இறுதியில் ஆங்கிலத்திற்கு பதில் இந்திதான் வரவேண்டும் என்று அரசியலமைப்பில் ஒரு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பது உண்மையே. ஆனால், வரவர இந்த ஏற்பாட்டுக்கு ஆட்சேபங்கள் அதிகமாகிக்கொண்டு வருகின்றன; இந்த மாறுதல் எப்போது ஏற்பட வேண்டும்; இடைக்கால ஏற்பாடுகள் என்ன என்ற கேள்விகள் எழுகின்றன. இந்தி பேசாத எல்லா ராஜ்யங்களும் இந்தியை ஏற்கலாம் என்று சம்மதம் தெரிவிக்கும் வரையில், இத்தகைய மாறுதல் ஏற்படக்கூடாதென்பதே சென்னை சர்க்காரின் அபிப்ராயமாகும். இது சமீபத்தில் நடக்கக்கூடிய காரியமாகத்தோன்றவில்லை. ஆங்கிலம் காலவரம்பின்றி துணை ஆட்சிமொழியாக நீடிக்க வேண்டுமென்று சென்னை சர்க்கார் ஆரம்பத்திலிருந்தே வற்புறுத்தி வந்திருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும். இதற்காக, பார்லிமெண்டில் சட்டமியற்றுவதோடு நிலைமையைத் தெளிவாக்குவதற்காக அரசியலமைப்பையும் திருத்தவேண்டுமென்று வற்புறுத்தி வந்திருக்கிறோம்.

ஆங்கிலம்தான் இந்தியாவின் இணைப்பு மொழியாக நீடிக்கவேண்டுமென்பதே சென்னை சர்க்காரின் திடமான அபிப்ராயமாகும்; சர்க்காரின் மொழிக் கொள்கையும், இதை சாத்தியமாக்கும்விதத்தில் இருக்கவேண்டும். ஆரிய மொழிகளுடன் திராவிட மொழிகள் சரி சமமாக இருப்பதற்கும் இது ஒன்றுதான் வழி என்று சென்னை சர்க்கார் உறுதியாக நம்புகிறார்கள். மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக இந்தியாவை ஆண்டவர்களின் மொழி ஆங்கிலமாக இருந்தது என்பது சரித்திரத்தில் நேர்ந்த அகஸ்மாத்தான சம்பவமாகும். உள்நாட்டில் ராஜ்யங்களுக் கிடையே தொடர்பு வைத்துக்கொள்ளவும், உலகின் மற்ற பாகங்களுடன் இந்தியா தொடர்பு வைத்துக் கொள்ளவும் ஆங்கிலத்தை நாம் மேற்கொள்வதற்கு அந்தக் காரணம் குறுக்கே நிற்கக்கூடாது. உலகில் பெரும்பாலோர் பேசும் மொழியாகவும் ஆங்கிலம் இருக்கிறது. ஜப்பான், ரஷியா போன்ற நாடுகளில்கூட ஆங்கிலம் கட்டாய பாடமாக போதிக்கப்படுகிறது. ஆகையால் உணர்ச்சிபூர்வமான காரணங்களுக்காக மட்டும் ஆங்கிலத்தை கைவிட்டுவிடக் கூடாதென்பதே சென்னை சர்க்காரின் திடமான அபிப்ராயமாகும்.

யூனியன் கல்வி இலாகா அனுப்பியுள்ள குறிப்பில் காணப்படும் பின்கண்ட யோசனைகளை சென்னை சர்க்கார் பொதுவாக ஒப்புக்கொள்கிறார்கள்:

1. ஒரே சமயத்தில் மூன்று மொழிகளை கற்றுக்கொள்வதென்பது குழந்தைகளுக்கு அளவுக்கு மீறிய சுமையாகும்; ஆகையால், எந்த கட்டத்திலும் இரண்டுமொழிகளுக்கு மேல் கட்டாய அம்சம் இல்லாமல் பார்த்துக்கொள்ள வேண்டும்.

2. எந்த இரு மொழிகளையும் ஒரே காலத்தில் ஆரம்பிக்கக் கூடாது.

(3) இரண்டாவது மொழியை ஆரம்பிப்பதற்கு முன்பு, முதல் மொழியைக் கற்றுக்கொள்ளபோதிய அவகாசம் இருக்கவேண்டும். அதே மாதிரி மூன்றாவது மொழியை ஆரம்பிப்பதற்கு முன்பு இரண்டாவது மொழியைக் கற்றுக்கொள்வதற்குப் போதிய அவகாசம் தரப்பட்டிருக்க வேண்டும்.

மூன்றாவது யோசனை சம்பந்தப்பட்டவரையில், ஆரம்பப் பருவத்தில் குழந்தைகள் சீக்கிரமாக மொழியைக் கற்றுக்கொள்ள முடியுமாகையால், ஆங்கில போதனையைக் கூடியவரையில் சீக்கிரமாக ஆரம்பித்துவிட வேண்டும் என்பதே சென்னை சர்க்காரின் திடமான அபிப்பிராயமாகும். மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளுவது அவ்வளவு கஷ்டமல்ல. சென்னை ராஜ்யத்தில் இன்றைய ஆங்கில போதனை முறைப்படி, மூன்றாவது வகுப்பிலேயே குழந்தைகளுக்கு வாய்மொழியாக ஆங்கிலம் சொல்லித் தரப்படுகிறது. அகரவரிசை முதலியவைகளெல்லாம் நாலாவது வகுப்பிலிருந்து சொல்லித்தரப்படுகிறது.

யூனியன் கல்வி இலாகா அனுப்பியுள்ள குறிப்பில் 'இணைப்பு மொழிகள்' என்ற வார்த்தை உபயோகிக்கப்பட்டிருக்கிறது. பல இணைப்பு மொழிகளை உருவாக்க முடியாதென்பது தெளிவு. அதாவது இந்தியாவிலுள்ள எல்லா ராஜ்யங்களிலும் பேசப்படக்கூடிய அல்லது

புரிந்துகொள்ளப்படக்கூடிய பல மொழிகளை இணைப்பு மொழிகளாக்க முடியாது. இப்போதைக்கு இணைப்பு மொழி என்ற இந்த வியாக்கியானத்திற்குப் பொருத்தமானதாயிருப்பது ஆங்கிலம் ஒன்றுதான். காலப் போக்கில், ஒருக்கால், ஒன்றிரண்டு நூற்றாண்டுகளுக்குப் பின்னர், ஆங்கிலத்திற்குப் பதிலாக ஹிந்தி இணைப்பு மொழியின் இடத்தைப் பெறுவதாயிருக்கலாம். "நடைமுறையில், இந்தியே நாட்டின் இணைப்பு மொழியாகப் பெரும் அளவில் உபயோகிக்கப்பட்டு வருகிறது" என்று கூறுவது கொஞ்சமும் சரியானதல்ல. இந்தியாவிலுள்ள எந்த மொழியும் இணைப்புமொழியாக முடியும் என்று நினைப்பதற்கு இடமில்லை. ஆகையால், (1) ஆங்கிலத்தை அகில இந்திய மொழியாகவே அல்லது ஒரு இணைப்பு மொழியாகவே வைத்துக்கொள்ளவேண்டியது அவசியமாகும். (2) நாளடைவில், ஹிந்தியை மற்றொரு இணைப்புமொழியாக அல்லது அகில இந்திய மொழியாக உருவாக்கவேண்டும். இந்த அபிவிருத்தியானது ஹிந்தி பேசாத ராஜ்யங்கள்மீது எந்த நிர்ப்பந்தத்தையும் உபயோகிக்காமலும். திராவிட மொழிகளை பிரதிகூலமான நிலைமையில் வைக்காமலும் இருக்க வேண்டும்.

யூனியன் கல்வி இலாகா அனுப்பியுள்ள குறிப்பில் கூறப்பட்டுள்ள யோசனையின்படி ஹிந்தி பேசும் ராஜ்யத்திலுள்ள ஒரு மாணவன் ஆங்கிலம் கற்றுக்கொள்ளாமல் இருக்க முடியும்; அதே மாதிரி ஹிந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ள மாணவன் ஹிந்தி கற்றுக்கொள்ளாமல் இருக்கமுடியும். இப்படி நடந்தால், நாளடைவில், இந்தியாவில் இணைப்பு மொழி என்பதே இல்லாமற் போய்விடும். ஹிந்தி ராஜ்யங்களிலுள்ளவர்களுக்கு ஆங்கிலம் புரியாது. ஹிந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ளவர்களுக்கு ஹிந்தி புரியாது; ஹிந்தி பேசாத ராஜ்யங்களில் வலுக்கட்டாயமாக ஹிந்தி போதனையைச் சுமத்தி அதை இணைப்பு மொழியாக்குவதற்கு முயற்சி செய்தால் மக்களிடையே ஆத்திரமும் சந்தேகமும் ஏற்படும்; ஹிந்தி ராஜ்யங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன என்ற ஒரு உணர்ச்சியும் தோன்றும். பல்வேறு ராஜ்யங்களும் ஒன்று சேருவதற்கு பதிலாக நிச்சயம் தனித்தனியாகப் பிரிந்துபோகும் போக்கு ஏற்படும். தேசிய ஒருமைப்பாடு, ஒற்றுமை என்ற முக்கிய நோக்கம் தோல்வியடைந்துவிடும்.

# என்ன செய்து விட்டான்?

கவிஞர் முடியரசன்

எதனைச் செய்தே உயர்ந்துவிட்டான்—மனிதன்
எதனால் உலகில் சிறந்துவிட்டான்
இதயம் ஒன்றை மறந்துவிட்டான்—கண்கள்
இருந்தும் ஒளியைத் துறந்துவிட்டான்

சிரிக்கத் தெரிந்தும் மறைத்துவைத்தான்—அவன்
சிந்தையில் அன்பைக் குறைத்துவைத்தான்
திறக்கும் கதவை அடைத்துவைத்தான்—அங்கே
தீமைகள் பலவாய்ப் படைத்துவைத்தான்

எதனால் மனிதன் செருக்கடைந்தான்—உள்ளம்
இல்லை அதனால் உருக்குலைந்தான்
உதவும் நினைவை இழந்துவிட்டான்—வீணில்
உடலால் சுமைபோல் வளர்ந்துவிட்டான்

பள்ளியில் எல்லாம் படித்துவிட்டான்—ஆனால்
படித்ததை அங்கே முடித்துவிட்டான்
தெள்ளிய அறிவைக் கெடுத்துவிட்டான்—அதனைத்
தீமைக் கென்றே கொடுத்துவிட்டான்

பேச்சில் எல்லாம் சொல்லிவிட்டான்—வீணில்
பெருமைகள் யாவும் அள்ளிவிட்டான்
பூச்சும் வேடமும் போட்டுநின்றான்—செயலில்
புன்மைகள் செய்தே காட்டுகின்றான்

வானில் நடந்தே முடித்துவிட்டான்—அங்கே
வண்ண நிலாவைப் பிடித்துவிட்டான்
ஏனை வியப்பும் நடத்திவிட்டான்—ஆனால்
ஏனோ பண்பைக் கெடுத்துவிட்டான்

அறிவின் எல்லை கண்டுநின்றான்—இயற்கை
ஆற்றலை எல்லாம் வென்றுநின்றான்
உரிமை வாழ்வுங் கொண்டுநின்றான்—மற்றவர்
உரிமையை மட்டுங் கொன்று நின்றான்

ஓராயிரமுறை ஆடுகின்றான்—கடவுள்
ஒவ்வொன் றின்முனம் பாடுகின்றான்
மாறா இன்பந் தேடுகின்றான்—ஆனால்
மனிதனை மட்டுஞ் சாடுகின்றான்

மனிதனை மனிதன் விரும்பிவிட்டால்—நெஞ்சில்
மானிட அன்பே அரும்பிவிட்டால்
தனிமனி தன்சுகம் குறைந்துவிட்டால்—உலகம்
சரிநிகர் சமமாய் உயருமடா

மும்மொழி திட்டம் சம்பந்தமாக யூனியன் கல்வி இலாகா அனுப்பியுள்ள குறிப்பில், சில மாறுதல்கள் செய்யவேண்டுமென்று இந்த சர்க்கார் கருதுகிறார்கள்.

1. 1-முதல் 4-வது வகுப்புவரையில் தாய்மொழி அல்லது பிராந்திய மொழியைக் குழந்தைகள் கற்க வேண்டுமென்பதை இந்த சர்க்கார் ஒப்புக்கொள்ளுகிறார்கள்.

2. 5-முதல் 7-வது வகுப்புவரையில், இந்தியை தாய்மொழியாகக் கொண்ட குழந்தைகளுக்கு ஆங்கிலம் அல்லது இந்திய மொழிகளில் ஒன்று அல்லது சமஸ்கிருதம், அல்லது பாரசீகம், அல்லது அரபு மொழியைக் கற்றுக்கொடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறது. இந்தி பேசும் ராஜ்யங்களில் கூட, ஆங்கிலம் அல்லது வேறு ஏதாவது அன்னிய மொழியே (இந்திய மொழியல்லாதது) இரண்டாவது மொழியாக இருக்கவேண்டுமென்று சென்னை சர்க்கார் கருதுகின்றனர். சாதாரணமாக, போதிக்கப்படும் இந்திய மொழியல்லாத அன்னிய மொழி ஆங்கிலமாகவேதான் இருக்கும். இந்தி ராஜ்யங்களில் உள்ள மாணவர்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்ளுவதற்கு இது ஒன்றுதான் வழி; இதை அவர்கள் கற்றுக்கொள்ளுவது இந்தியாவின் மற்ற பகுதிகளுடன் பழக ஒரு இணைப்பு மொழியாக உபயோகப்படும். இந்தியை தாய்மொழியாகக் கொள்ளாதவர்கள் ஆங்கிலம் அல்லது வேறு ஏதாவது அன்னிய மொழியைத்தான் கற்றுக்கொடுக்கவேண்டும். இங்கும் சாதாரணமாக ஆங்கிலம்தான் எடுத்துக்கொள்ளப்படும். பின்னர் ஒரு கட்டத்தில் இந்தி இஷ்ட பாடமாக வரலாம்.

இந்தயோசனையை மேற்கொள்ளுவதில் ஒரு நன்மை இருக்கிறது. இந்தியா பூராவிலும் உள்ள எல்லா மாணவர்களுக்கும் தொடர்ந்து ஆங்கிலம் போதிக்கப்படும். இப்போது ஆங்கிலம் வகிக்கும் இடத்திற்கு இந்தி வரும்வரையில் ராஜ்யங்களுக்கிடையே தொடர்பு வைத்துக்கொள்ளுவதற்கு ஆங்கிலம் ஒரு முக்கியமான இணைப்பு மொழியாக இருந்துகொண்டிருக்கும். இதனால் ஒரு ராஜ்ய மாணவர்கள் மற்றொரு ராஜ்ய மாணவர்களைவிட அனுகூலமான நிலைமையில் இருப்பார்கள் என்றும் ஏற்படாது. எல்லா மாணவர்களும் ஆங்கிலம் முக்கியமொழியாக உள்ள உலகத்தின் மற்றபகுதிகளுடன் தொடர்பு வைத்துக்கொள்ளவும் முடியும். உலகத்தின் மற்ற பகுதிகளில் என்ன நடக்கிறது என்றுமாணவர்கள்தாமே பார்த்துத் தெரிந்துகொள்வதற்கு ஆங்கிலம் பலகணிபோல் இருக்கும். யூனியன் கல்வி இலாகா கூறியுள்ளயோசனையை அமல் நடத்தினால், இந்தி ராஜ்யங்களிலுள்ள மாணவர்கள் ஆங்கிலம் கற்றுக்கொள்ளாமலும், இந்தி பேசாத ராஜ்யங்களிலுள்ள மாணவர்கள் இந்தி கற்றுக்கொள்ளாமலும் ஏற்பட்டு, இணைப்பு மொழியே இல்லாமற்போய், தேசிய சீர்குலைவு ஏற்பட்டுவிடும்.

3. 8-வது வகுப்பு 10-வது வகுப்புவரையில் இந்தியைத் தாய்மொழியாகக்கொண்ட மாணவர்களுக்கு எந்த மொழி என்பது 5-முதல் 8-வது வகுப்புவரை உள்ளதைப்போன்றே இருக்கும் என்று குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. இந்த கட்டத்தில், மாணவர்கள் 5-முதல் 8-வது வகுப்புவரையில் படிக்காத மொழியைப் படிக்கவேண்டும். இந்தக் கருத்தை இந்த சர்க்கார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். ஆனால், 5-வது முதல் 8-வது வகுப்பு வரையில் இரண்டாவது மொழி என்பது ஆங்கிலம் அல்லது வேறு அன்னிய மொழியாக இருக்கவேண்டும். 8-முதல் 10-வது வகுப்புவரையில் இந்தி பேசாத ராஜ்ய மாணவர்களுக்கு இரண்டாவது மொழி எதுவாக இருக்கவேண்டும் என்று குறிப்பில் தெளிவாக இல்லை. இந்தக் காலத்தில், இந்தியையோ அல்லது வேறு இந்திய மொழியையோ மாணவர்கள் இஷ்டபாடமாக எடுத்துக்கொள்ளலாம். தாய் மொழியில் தீவிர ஆராய்ச்சி செய்யலாம் அல்லது 1-முதல் 5-வது வகுப்புவரையில் படித்த பிராந்திய மொழியில் தீவிர ஆராய்ச்சியை எடுத்துக்கொள்ளலாம். அதாவது, 8-வது 10-வது வகுப்புகளுக்கிடையே மாணவர்கள் இந்திய மொழியல்லாத ஒரு அன்னிய மொழியைத் தொடர்ந்து கற்றுக்கொண்டிருப்பார்கள்; அத்துடன், வேறு எந்த இந்திய மொழியையாவது இஷ்டபாடமாக எடுத்துக்கொண்டிருப்பார்கள். அல்லது தாய் மொழி அல்லது பிராந்திய மொழியில் தீவிர ஆராய்ச்சியை எடுத்துக்கொண்டிருப்பார்கள். இந்த சமயத்தில் ஒரு விஷயத்தைக் குறிப்பிடவேண்டும். முதலில் உருவாக்கப்பட்ட மும்மொழி திட்டத்தை திராவிட மொழி ராஜ்யங்கள் அப்படியே அமல் நடத்தின. ஆனால், இந்தி ராஜ்யங்கள் அப்படிச் செய்யவில்லை. தென்னிந்திய மொழிகளில் ஒன்றை கற்றுக்கொள்ள இந்தி ராஜ்யங்கள் உண்மையான முயற்சி செய்யவில்லை. இது எதிர்பார்க்கக்கூடியதுதான். இந்தி ராஜ்யத்திலுள்ள ஒரு மாணவன், வேறு எந்த மொழியையும், குறிப்பாக ஒரு தென்னிந்திய மொழியைக் கற்றுக்கொள்ளுவதற்குக் காரணம் எதுவும் இல்லை. இதனால் அவனுக்கு அதிகப்படியான நன்மை எதுவும் கிடைக்கவில்லை. இதனால் அவனுக்கு அதிகப்படியான வேலை வாய்ப்புகளும்கிடைக்கவில்லை. புதிய திட்டத்தின்படி, இந்த வகுப்புகளில் இந்தியல்லாத ஒரு மொழியை இஷ்ட பாடமாக எடுத்துக்கொள்ளுவது மாணவர்களின் இஷ்டத்திற்கு விடப்பட்டிருக்கிறது.

4. 11 முதல் 12 வகுப்புவரையில் (எஸ். எஸ். எல். ஸி அல்லது பி. யு. ஸி. அல்லது இன்டர் மிடியட் வகுப்புகளுக்கு சமமானவை) மாணவர்கள் போதனா மொழியைத் தவிர, தமக்கிஷ்டமான ஒரே ஒரு மொழியைத்தான் கற்றுக்கொள்ள வேண்டுமென்பது சரியான யோசனையாகவே இந்த சர்க்காருக்குத் தோன்றுகிறது.

லிபி சம்பந்தப்பட்ட வரையில் இந்தி பேசாத பகுதியிலுள்ள குழந்தைகள் தமக்கு ஏற்கனவே தெரிந்த—கன்னடம், வங்காளி போன்ற—லிபிகளில் ஆரம்பிக்கலாமென்றும் பின்னர் அதில் பிடித்தமிருந்தால் இரண்டாவது வருஷத்தில் தேவநாகரி லிபியில் அதைச் சொல்லிக்கொடுக்கலாமென்றும் குறிப்பில் கூறப்பட்டிருக்கிறது. கன்னடம் அல்லது வங்காளி மொழிகள் விஷயத்தில் இது சாத்தியமாயிருக்கலாம். ஆனால், தமிழ் விஷயத்தில் அது அவ்வளவு சுலபமானதாயிராது, ஒலி விஷயத்தில் தமிழும், சமஸ்கிருதமும் வெவ்வேறானவை. ஒன்றில் இருப்பது போன்ற அகர வரிசைகள் மற்றொன்றில் இருப்பதில்லை. இப்போது ஆங்கிலம் கட்டாயமாக இருப்பதால் எல்லா மாணவர்களும் ரோமன் லிபியைக் கற்றுக்கொள்ளுகிறார்கள். இதனால் மாணவர்கள் தமிழ், ரோமன் ஆகிய இரு லிபிகளையும் கற்றுக்கொள்ளுகிறார்கள். அவர்கள் தேவ நாகரி என்று மூன்றாவதொரு லிபியைக் கற்றுக்கொள்ளுவது உண்மையிலேயே கஷ்டமாயிருக்கும். சமஸ்கிருதம் அல்லது இந்தியை இஷ்டபாடமாக எடுத்துக்

கொண்டாலொழிய அது கஷ்டமாயிருக்கும். இந்தி உள்படமற்றமொழிகளின் போதனைக்கும் ரோமன் லிபியை உபயோகிக்கலாமா என்று விரிவாகப் பரிசீலனை செய்வது இன்னும் அதிக உபயோகமாயிருக்கும்.

சமஸ்கிருதம் சம்பந்தப்பட்ட வரையில், சமஸ்கிருதத்தைப் பேணிக்காத்து, அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் இந்தியாவுக்கு விசேஷப் பொறுப்பு உண்டு என்பதை ஒப்புக்கொள்ளலாம். ஆனால் இஷ்டபாடமாகக்கூட சமஸ்கிருதத்தை எடுத்துக்கொள்ளும் மாணவர்களின் எண்ணிக்கை வருஷா வருஷம் குறைந்துகொண்டே வருகிறது. ஆகையால், எல்லோரும் இதைக் கட்டாயமாகப் படிக்க வேண்டுமென்று விதிப்பதின் மூலம் சமஸ்கிருதத்தை உயிர்ப்பிப்பது அனுபவ சாத்தியமற்றதாயிருக்கலாம். பள்ளிக்கூடங்களில் மட்டுமின்றி, கல்லூரிகளில்கூட சமஸ்கிருதத்தை எடுத்துக்கொள்ளும் மாணவர்கள் அதைப் படிப்பதற்கு வேண்டிய வசதிகளை அளிப்பது தான் ஒரு ராஜ்ய சர்க்கார் செய்யக் கூடிய காரியமாகும்.

1986க்குள் குழந்தைகள் தாய் மொழியையும், இந்தி அல்லது ஆங்கிலம் இரண்டில் ஒரு இணைப்பு மொழியையும் கற்றுக் கொண்டிருப்பார்கள் என்று குறிப்பில் கூறப்பட்டுள்ளது. எல்லா இந்தி ராஜ்யங்களிலும் ஆங்கிலம் கட்டாயமாக போதிக்கப்பட்டாலொழிய 1986க்குள் இது நிறைவேறுமா என்பது சந்தேகம்தான். இந்தி பகுதிகளிலுள்ள குழந்தைகளுக்கு, இந்த ராஜ்யத்திலிருப்பதைப்போல் 3-வது வகுப்பிலிருந்து ஆங்கிலம் சொல்லித் தராவிட்டாலும், 5-வது வகுப்பிலிருந்தாவது ஆங்கிலம் கட்டாயமாகச் சொல்லித் தரப்பட வேண்டும் என்று இந்த சர்க்கார் வற்புறுத்துவதற்கு இது மேற்கொண்டு ஒரு காரணமாகும்.

சர்வதேச தொடர்புகளுக்காக முக்கியமான அன்னிய மொழிகளில் நல்ல தேர்ச்சி பெற்றவர்கள் சிலர் இருக்கவேண்டுமென்று கல்வி கமிஷன் கூறியுள்ள கருத்தை இந்த சர்க்கார் ஒப்புக்கொள்ளுகிறது. இதற்காக சிறுவயதிலிருந்தே முக்கியமான அன்னிய மொழிகளில் பாடம் சொல்லித் தரும் சில பள்ளிகளை ஆரம்பிக்க வேண்டியது அவசியமாகும்.

❀

# நல்லரசு

பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காக்க முடியும் என்பதை உலகிற்கு உணர்த்தியதோடு, பெற்ற சுதந்திரத்தின் பலனை எல்லா மக்களும் அடையத்தக்க விதத்தில், இந்த அரசு நம்முடைய அரசு என்று எல்லா மக்களும் சொல்லிக்கொள்ளும் விதத்தில் நல்லரசு நடத்தவேண்டும் என்பதுதான் சுதந்திர விழாவில் நாம் எடுத்துக்கொள்ளும் உறுதிமொழியாகும்.

1947 ஆகஸ்ட் 15-ம் தேதி நாம் வெள்ளையருடன் கணக்குத் தீர்த்துக்கொண்ட நாள். இன்று கொண்டாடுகின்ற சுதந்திர நாள் கணக்குப் பார்க்கும் நாள். பெற்ற சுதந்திரத்தால் அடைந்த பலன் என்ன? அதற்காக ஆற்றியிருக்கின்ற பணிகள் என்ன? ஆற்ற வேண்டிய பணிகள் என்ன? என்பனவற்றைப் பார்க்கவேண்டிய நாள். இதை விட்டுவிட்டு காங்கிரஸ் கட்சியுடன் உள்ள கணக்கைப் பார்க்கவேண்டிய நாள் அல்ல. அது சில்லறைக்கணக்கு. அந்தக் கணக்கு 1967 பிப்ரவரியிலேயே பைசல் செய்யப்பட்டு விட்டது. நம்மை நாமே ஆண்டு கொள்ளுகிறோம் என்று அறிவித்து 20 ஆண்டுகள் ஆன பிறகும், ஐந்தாண்டுத் திட்டங்களை வரிசையாக எப்படி நிறைவேற்றினோம் என்று அறிவித்த பிறகும், நாட்டில் ஏழ்மை இருக்கிறது; அறியாமை இருக்கிறது; தீண்டாமை இருக்கிறது; கல்லாமை இருக்கிறது என்றால், நம்மைப் பார்த்து மற்ற நாடுகள் எள்ளி நகையாடும்.

ஐந்து ஆண்டுகளுக்குநாங்கள் கைகட்டி வாய் பொத்திக்கொண்டிருக்க வேண்டுமா என்று முன்னாள் முதல் மந்திரி பக்தவத்சலம் கேட்கிறார். எதை எதையோ பேசிக்கொண்டிருந்த வாயைக் கட்டிப்போட முடியுமா? எதையோ செய்துகொண்டிருந்த கரங்களைக் கட்டி வைத்துவிட முடியுமா? சிந்தையை அடக்கி சும்மா இருப்பது எளிதல்ல என்று முற்றும் துறந்த தாயுமானவரே சொல்லியிருக்கிறார் என்றால் அதை நான் அவரிடம் எதிர்பார்க்கவில்லை. பேசுங்கள். நாங்கள் எந்த நேரத்தில் தவறு செய்தாலும் தாராளமாகக் கண்டியுங்கள். தவறான வழியில் நாம் நடக்கின்றோம் என்றால் அதை எடுத்துச் சொல்லி தடுத்து நிறுத்துங்கள். அதை விட்டுவிட்டு நடக்கின்றபோதே இவன் நடப்பானா? நடந்தால் எங்கே போய் சேருவான் என்று பேசுவது எதைக் காட்டுகிறது என்றால், அதைக் கூடச் செய்வதற்கு அவர்களால் முடியவில்லை என்பதைத்தான் காட்டுகிறது.

காங்கிரஸ்காரர்கள் நம்மைப் பற்றித் தவறாக கூட்டங்களில் பேசுவதாகச் சொன்னார்கள். இன்னும் என்ன இருக்கிறது பேசுவதற்கு? இந்த இருபது வருஷ காலத்தில் பேசாத வார்த்தையா அவர்கள் வாயிலிருந்து வரப்போகிறது? கறுப்பாக வெட்டு மீசை இருந்த காலத்திலேயே எனக்கு கோபம் வந்ததில்லை. தளர்ந்து போய் மீசை நரைத்து அதற்கு முன்பே ஆசைகள் எல்லாம் நரைத்துப் போயிருக்கின்ற இந்த காலத்திலா எனக்கு கோபம் வரப் போகிறது? அவர்கள் இந்தமாதிரி காரியங்களை எல்லாம் விட்டுவிட்டு அவர்கள் பெற்றுள்ள அனுபவ அறிவை அருள்கூர்ந்து கொடுக்கவேண்டும். அவைகளை நாங்கள் ஏற்றுக்கொள்வோம். அது உண்மையான ஜனநாயகம் ஆகும்.

நிபுணர்கள் தாங்கள் பெற்றிருக்கின்ற நல்ல அறிவை எல்லா மக்களுக்கும் தருவதற்கு முன்வர வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன். நாட்டு மக்கள் எல்லோரும் தங்கள் அனுபவங்களை நாட்டுக்குப் பயன்படுத்த முன்வரவேண்டும். எல்லோரும் சீரணியில் சேரவேண்டும். சீரணி ஒரு புறத்திலும், நிபுணர்கள் தருகின்ற நல்லறிவு மற்றொரு புறத்திலும், நாட்டு மக்கள் பெற்றிருக்கின்ற அனுபவம் இன்னொரு புறத்திலும் சேர்ந்து இயங்கினால் நாட்டை ஏழ்மையிலிருந்து விடுவிக்கலாம்.

— அறிஞர் அண்ணா




## 3—16
## படகில் அஞ்சலை

தந்தையின் முகத்தைப் பார்க்கத் தைரியமில்லாமல், துக்கத்தோடு திருமேனி தலைகுனிந்தாள். நிலத்தில் விழுந்துகிடந்த தாமரை மலர், அவளது நீலவிழிகளில் பட்டது.

'இந்த அழகிய மலர் — செந்தாமரை மலர்—இன்னும் சிறிது நேரத்தில் வாடிவிடப்போகிறது! இந்தக் கண்கவர் மலரின் கதியையே, என் வாழ்வும் அடைந்துவிட்டது! வேண்டாம் என்றார் — ஆபத்து என்று எச்சரிக்கை செய்தார் — வஞ்சக வலை விரிக்கிறான் உன் தந்தை நீயே ஓடி அந்த வலையில் அகப்பட்டுக்கொள்ளாதே என்று தடுத்து நிறுத்தப்பார்த்தார்! பாவி நான் கேட்டேனா? பதைத்தேன்! பதறினேன்! ஓலை எழுதியிருக்கிறார் நந்திநாயகம் — ஒரு ஆபத்தும் வராது என்று அவசரப்பட்டேன்! தூண்டில் சிக்கிய மீனைப்போல, இதோ துடிக்கிறேன்! தூண்டில் சிக்கிய மீன் துடித்தாலும் துள்ளினாலும்—அழுதாலும் அலறினாலும் உயிர் தப்ப முடியுமா? தூண்டில் மீன் நான் — துவண்டுவிட்டது என் வாழ்க்கை!' என்று கண்ணீர் வழிய கதறியழுதுகொண்டு இருந்தவள்—'திருமேனி' என்ற நந்திநாயகத்தின் குரலைக் கேட்டதும், 'நீங்களா?' என்று பற்களைக்கடித்துக்கொண்டே பார்வையை உயர்த்தினாள்.

அமைதி தவழும் முகத்தோடு நந்திநாயகம் தாடியைத் தடவிக்கொண்டே அந்தத் தத்தையைப் பார்த்துச் சிரித்தார்.

அந்தச் சிரிப்பைக் கண்டதும், நெருப்புக் குழம்பை வாரி உடலில் தெளித்ததுபோல் இருந்தது அவளுக்கு.

'பயந்துவிட்டாயா, திருமேனி?' என்ற பராக்கிரமபாகுவின் கேள்வி காதில் விழுந்ததும், அவள் உடல் சிலிர்த்தது.

'அப்பா!'

'விளையாட்டிற்கு அப்படிச் சொன்னால்—உண்மையிலேயே நடுநடுங்கிவிட்டாயே! உன்னை மன்னித்தது மன்னித்ததுதான் திருமேனி—அதில் ஒரு மாற்றமும் இல்லை!'

'உண்மையாகத்தான் சொல்கிறீர்களா, அப்பா?'

'புத்தபிரான் ஆணையாகச் சொல்கிறேன் — உன்னை நான் மன்னித்துவிட்டேன்! கோபத்தால் கொதித்துக்கொண்டிருந்த —பழிக்குப்பழி வாங்காமல் விடமாட்டேன், என்று கொக்கரித்துக்கொண்டிருந்த—என்னை, அமைதி அடைய, அறிவு பெறச் செய்தவர் நமது மந்திரியார் நந்திநாயகம் அவர்கள்தான்! என் கோபத்தையும் பொருட்படுத்தாமல், உனக்காக ஒரே பிடிவாதமாக அவர் வாதாடாமலிருந்திருந்தால் நான் தெளிவு பெற்றிருக்கமாட்டேன்! திருமேனி, சென்றவை சென்றவையாகவே இருக்கட்டும் — இனி நடக்கப்போகிறவைகள், நல்லவையாக அமையட்டும்!' என்று உருக்கமான குரலில் பராக்கிரமபாகு பேசியதைக் கேட்டதும் அப்பா!' என்று அவனது கால்களைப் பிடித்துக்கொண்டு கண்ணீர்விட்டாள், திருமேனி.

மகளைத் தூக்கி நிறுத்தி அழாதே அம்மா அழாதே!' என்று பரிவோடு அவளது கண்ணீரைத் துடைத்தான்.

'எழில்மிகு பொலனருவா நகரைத் தீயிட்டுப் பொசுக்கிவிட்டேனே, அப்பா!' என்று முகத்தை மூடிக்கொண்டு அவள் தேம்பினாள்.

'நீ வைத்த தீ அல்ல திருமேனி அது! என் மூடமதி வைத்த தீ! அதற்காக வருந்த வேண்டியவன் நானே ஒழிய நீ அல்லள்! வள்ளுவரையும் புத்தரையும் பின்பற்றும் நான் — இரத்த வெறியனாக மாறினேனே, அதற்காக நான் பெற்ற தண்டனை அது!' என்று சொல்லிக்கொண்டே அந்த அறையைவிட்டு வெளியே சென்ற பராக்கிரமபாகுவை, திருமேனியும் நந்திநாயகமும் பின் தொடர்ந்தனர்.

விசாலமான வேறொரு அறையில் மூவரும் உட்கார்ந்தனர்.

'குலசேகரன் ஆட்சி எப்படி அம்மா நடைபெறுகிறது?' என்று மகளைப் பார்த்து இலங்கை அரசன் கேட்டான்.

'ஆட்சி நடத்துவது அவரல்ல அப்பா, தூமகேதுதான் பாண்டிய நாட்டை ஆண்டுகொண்டிருக்கிறான். அவன் சுற்றிவிடும் பம்பரமாகத்தான், பாண்டிய மன்னர் இருக்கவேண்டியிருக்கிறது. அந்த நிலையிலிருந்து இப்பொழுதுதான் அவர் சிறுகச் சிறுகத் தம்மை மாற்றிக்கொண்டு வருகிறார். தூமகேதுவின் முகம் கோணினால், சோழனின் வாள் மதுரைச் சிம்மாசனத்தை நோக்கிப் பாய்ந்து வரும் என்ற அச்சமே இத்தனை நாளும் அவரை அவ்வாறு நடந்துகொள்ளும்படி செய்து வந்தது! இப்பொழுது நிலைமையை மாற்றிவிடவேண்டும் என்ற முடிவிற்கு வந்துவிட்டிருக்கிறார். அதற்காகவே படையைப் பெருக்கிக்கொண்டு வருகிறார். சோழனைத் தாக்கவோ, அண்டை அயல் நாடுகளின் மீது படையெடுக்க வேண்டுமென்ற ஆசையினாலோ அவர் படையைப் பெருக்கவில்லை. தூமகேதுவை ஏறிட்டுப் பார்க்கவும் அவன் செய்யும் அக்கிரமங்களைக் கண்டிக்கவும் வேண்டிய தைரியத்தைப் பெறுவதற்காகவே அப்படி அவர் படையைப் பெருக்குகிறார்! அப்பா இன்னும் சிறிது காலத்தில் தூமகேதுவைச் செல்வாக்கற்றவனாகச் செய்துவிடுவார்—அதன் பிறகே மக்களிடத்தில் அவருக்கோர் மதிப்பு ஏற்படும்! பகுத்தறிவு வாதிகளும் பௌத்தர்களும் அவருக்குப் பக்கபலமாக நிற்பார்கள்! சோழனே அவரைக் கண்டு நடுநடுங்கப் போகிறார் அப்பா! அந்த நாள் மிகவிரைவில் வரப்போகிறது!' என்று திருமேனி பூரிப்போடு சொல்லி நிறுத்தினாள்.

'இளவரசியாரே, அப்படி சோழனைத் தாக்க வேண்டிய நெருக்கடி ஏற்பட்டால் இலங்கைப் படைகளும் மதுரைக்குச் செல்லும்! இனி

பாண்டிய மன்னரை அசைக்க தமிழகத்திலே வேறு எந்த மன்னருக்கும் பலமோ, தைரியமோ இருக்க முடியாது!' என்று மந்திரியார் நந்தி நாயகம், பராக்கிரமபாகுவின் சார்பில் பேசி, அந்த மலர்க்கொடியாளின் மகிழ்ச்சியை இன்னும் அதிகமாக்கினர்.

'பொலனருவா புதுப்பிக்கப்படுகிறது!'

'வரும்போதுபார்த்தேன், அப்பா!,

'அவசரமாகப் புதுப்பிக்கப்படுகிறது!'

'அதையும் நான் கவனித்தேன், அப்பா!'

'இன்னும் ஆறு மாதங்களுக்குள் புதிய பொலனருவாவை நீ பார்க்கப் போகிருய்! பழைய நகரைவிட, புதிய நகரம் பலமடங்கு எழில்மிக்கதாக இருக்கும்! இவ்வளவு அவசரமாக நான் எதற்காக வேலைகளைச் செய்கிறேன் தெரியுமா?'

'எதற்கப்பா?'

'உன் திருமணத்தை விரைவிலேயே இங்கு நடத்தவேண்டும் என்பதற்காக!' என்று பராக்கிரமபாகு குறுநகையோடுசொன்னதும், அவள் நாணத்தால் தலை குனிந்தாள்.

இதே போல சேர நாட்டிலும் 'உங்கள் திருமணம் எப்பொழுது? என்று சோலையப்பன் கேட்டதும், நாணத்தால் அஞ்சலை தலை குனிந்து கொண்டாள்.

'ஏன் அஞ்சலை வெட்கமடைகிருய்? சொல்! தைரியமாகச் சொல்! உங்கள் சபதத்தை நீங்கள் எப்பொழுது நிறைவேற்றுகிறீர்களோ—தூமகேதுவின் உடல் பிணமாக எப்பொழுது தரையில் விழுகிறதோ—அந்த நல்ல நாளுக்கு அடுத்த நாளே மணக்கோலத்தில் எங்களை நீங்கள் பார்க்கலாம் என்று சொல்! உம், சொல்!' என்று அஞ்சலையின் அருகிலிருந்த கனகசேனன் சொன்னதும், கையிலிருந்த மயில் இறகைத் திருகிக்கொண்டே அவள் இளநகை புரிந்தாள்.

'கனகசேனு, அந்தப் பொன்னுள் மிக விரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறேன்! இதோ உங்களோடு இன்பமாகப் பேசியவாறு ஆற்றங்கரையில் உலவும் எனக்கு. கல்லறை இருக்கிறது பாண்டிய நாட்டில்! என்னைச் சாகடித்து விட்டதாக தூமகேது அங்கே பூரிப்பில் ஆழ்ந்திருக்கிருன்! என் செந்தாமரை கல்லறைமீது மலர் மாலை வைத்துக் கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பாள்! இன்று மதுரையினுள் நான் நுழைந்தால், சோலையப்பனின் ஆவி வருகிறது என்று பயப்படுவார்களே ஒழிய, உண்மையில் நான்தான் சோலையப்பன் — உயிரோடு தான் இருக்கிறேன் —என்று நான் எவ்வளவுதான் சொன்ன போதிலும், யாரும் நம்பமாட்டார்கள்! ஒரு காலத்தில் உண்மை கவிஞர்கள் நடமாடிய பாண்டிய மண்டலத்தில் —உயரிய கருத்துகள் தவழ்ந்த பொன்னுட்டில்—இன்று ஆண்டவனின் லீலைகளை அழகுத் தமிழிலே பாடும் சுயநல கவிஞர்களும், சூதுக்காரர்கள் அள்ளித் தெளித்த அறியாமைக் கருத்துக்களும் ஆதிக்கம் செலுத்துகின்றன. பேய் பூதம், மந்திரம் மாயை இவற்றை மக்கள் நம்பத் தொடங்கிவிட்டார்கள்! பகுத்தறிவை இழந்து வருகிருர்கள்! சீரழிந்து வரும் பாண்டிய மண்டலத்தை, செந்தமிழ்க் கழனியாக்க—பகுத்தறிவுப் பூஞ்சோலையாக்க—என் உயிர் நண்பனுன பொன்னையா, தன் ஒரே தங்கையை ஆதரவற்ற அனுதையாக விட்டு விட்டுப் பிணமாக கயிற்றிலே தொங்கினுன்! பொன்னையாவை நினைக்கும்போதெல்லாம்—நான் இருபது அடி...அறுபது அடி ...நூறு அடி...உயரமாக வளர்ந்து விட்டது போன்ற உணர்ச்சி எனக்கு உண்டாகிறது! தூமகேதுவை நான் நேருக்கு நேர் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைத்தால் —பாண்டிய நிலத்தில் என் பாதங்கள் பட பாண்டிய அரசன் அனுமதி தந்தால் — அன்றே என் சபதம் நிறைவேறி விட்டது என்று எண்ணிக்கொள் கனகசேனு!' என்று சொல்லிவிட்டு, அருகிலிருந்த ஒரு மேட்டின்மீது சோலையப்பன் ஏறினுன்.

அந்த மேட்டின்மீதிருந்த பலா மரத்தில் சாய்ந்து உட்கார்ந்த சோலையப்பனை நிமிர்ந்து பார்த்தாள் அஞ்சலை.

மரத்தில் கட்டியிருந்த ஓடத்தை அவிழ்த்துவிட்டு, கனகசேனன் அதில் ஏறி உட்கார்ந்தான்.

"சோலையப்பா, என்ன தனியாகப் போய்விட்டாய்! வா, ஓடத்தில் சிறிதுதூரம் போய்விட்டு வரலாம்!" என்று படகிலிருந்தபடியே, கனகசேனன் அழைத்தான்.

"கனகசேனு, என்னையா அழைக்கிருய்?"

"ஏன், சோலையப்பன் என்று இங்கு வேறு யாராவது இருக்கிருர்களா?"

"இல்லை, அஞ்சலை என்று சொல்வதற்குப்பதில் சோலையப்பன் என்று சொல்லிவிட்டாயோ என்று நினைத்தேன்!"

"தூமகேதுவின் சிறையில்போய்ச் சிக்கிக்கொள்ளும் அளவிற்கு காதலில் சுயநினைவு தவறிவிடுபவன் நான்அல்லன்சோலையப்பா!" என்று கூறியவனை இடைமறுத்து "அதைத்



3-ம் பக்கத் தொடர்ச்சி

பற்றியேகூட ஐயப்பட வேண்டிய நிலைக்கு நாம் அழைத்துச் செல்லப்படுகிருேம்.

கொலை வெறி மிக்க ஒரு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இத்தகைய 'பதட்ட நிலைகள் தோன்றத்தான் செய்யும்'—என்கிருர் அவர்.

இது ஒன்று போதாதா அந்தக் கொலைக் கருவியை ஏந்திக்கொண்டிருக்கும் கொடியவர்களுக்கு!

அக்டோபர் முதல் நாள் நள்ளிரவு பம்பாய் நகர தமிழர்களது தலைகள் பந்தாடப் படும் என்று நம்பப் போதுமானதாயிற்றே இந்தப் பேச்சு? — இப்படியே நம்பலாமா?

இந்தியா ஒரு நாடு என்றும், அது இந்தி மொழி ஒன்றிஞலேயே இணைக்கப்பட வேண்டும் என்றும் பன்னிப் பன்னிக் கூறிக்கொண்டு வருகிற இந்த வேளையில், சிவசேஞ இயக்கத்தின் இத்தகைய நடவடிக்கையிஞல் என்ன நிகழவேண்டும் என்பதனை மத்திய அரசு எதிர்பார்க்கிறதோ தெரியவில்லை!

மத்திய அரசுக்கோ—அல்லது மகாராஷ்டிர அரசுக்கோ—இந்த இயக்கத்தின் நடவடிக்கைகள் உடன்பாடு அல்லவென்ருல்—

சிவசேஞ இயக்கம், உடனடியாக அடக்கப்பட வேண்டும்; நடவடிக்கைகள் கண்காணிக்கப்பட வேண்டும்.

கொலைப் போக்கினைத் தூண்டிவிடுபவர்கள் யாராக இருந்தாலும், விருப்பு வெறுப்பின்றி கைது செய்யப்பட வேண்டும்.

இல்லையென்ருல், மாநில அரசும், மத்திய அரசுமே இதனைச் செய்கிறது என்றுதான் பொருள் கொள்ள முடியும். அந்தப் பொருளில், "இந்தியா ஒரு துணைக்கண்டமே தவிர, ஒருங்கிணைந்த ஒரு நாடு அல்ல; அவரவர் பகுதியை அவரவரே பாதுகாத்துக்கொள்ள வேண்டும்." என்பது தொக்கி நிற்கத்தான் செய்யும்!

அப்போது 'சிவசேன' இயக்கங்களும், அதன் கொலை வெறியும் தாஞகவேஅடக்கப்பட்டுவிடும் என்று மக்கள் நம்பிக்கொள்ள வேண்டும் என்றே நாமும் நம்புகிருேம்.

---

திருமேனியிடம் கேட்டால் தெரியுமே!" என்ருள் அஞ்சலை.

"எதற்காக அஞ்சலை, இலங்கைக்குச் சென்று இளவரசியிடம் கேட்க வேண்டும் — இங்கேயே திருமேனி என்று ஒரு முறை சொல்லிவிட்டு, இவர் முகத்தைப் பார்த்துத் தெரிந்து கொள்ளலாமே!" என்று சோலையப்பன் சொன்னதும், அஞ்சலை படகிலிருந்தவனைக் திரும்பிப் பார்த்துச் சிரித்தாள்.

"படகில் போய் உட்காராமல் எதற்காக நிற்கிருய், அஞ்சலை — கடைசியில் என்னைத்தான் கோபித்துக்கொள்வார், இளவரசர்!" என்று சோலையப்பன் கூறியதும், அவள் படகில் போய் உட்கார்ந்தாள்.

"நீங்களும் வாருங்கள் அத்தான்!" என்று கையிலிருந்த மயில் இறகை ஆட்டி அழைத்தாள், அஞ்சலை.

"இல்லை, நீங்கள் போய்விட்டு வாருங்கள்! எனக்கு இந்த இடம் மிகவும் பிடித்திருக்கிறது!"

"ஏகாந்தமாக இருக்க விரும்புகிறவரை, எதற்காக நீ தொல்லைப் படுத்துகிருய், அஞ்சலை?" என்று கனகசேனன் துடுப்பை அசைத்தான்.

ஆற்றில் செல்லும் படகைப் பார்த்தபடி, சோலையப்பன் அந்த மேட்டின்மீது உட்கார்ந்திருந்தான்.

"என் தங்கை அஞ்சலை! தாய் தந்தை இல்லாதவள்! அவளைப் பாதுகாக்க வேண்டியது, நண்பஞ எனக்கு நீ செய்யவேண்டிய தனிப்பட்ட உதவியாகும். அவள் கண்ணீர்விட்டால், அதைவிட நீ எனக்குச் செய்யும் துரோகம் வேருென்றுமில்லை. அவள் குணத்திற்கேற்ற கணவனைப் பார்த்து, அவளுக்கு மணஞ்செய்து வைக்கவேண்டிய பொறுப்பையும் உன்னிடம் ஒப்படைக்கிறேன்!" என்று பொன்னையா ஓலையில் எழுதியிருந்த வார்த்தைகள், அவன் நினைவிற்கு வந்தன.

"பொன்னையா – என் அருமை நண்பனே–உன் தங்கை கண்ணீர் விடவில்லை, இதோ களிப்போடு செல்கிருள் பார்! அவளுக்கு நல்ல கணவஞகப் பார்த்து மணஞ்செய்து வைக்கும் பொறுப்பை என்னிடம் ஒப்புவித்துவிட்டுச் சென்ருய்! அந்தச் சிரமத்தை எனக்குத் தரக்கூடாதென்று, தனக்கேற்ற கணவனை அவளே தேர்ந்தெடுத்துக்கொண்டாள் பொன்னையா, தேர்ந்தெடுத்துக்கொண்டாள்!" என்று தனக்குத்தானே பேசிக்கொண்டான் பெருமையோடு.

"உங்கள் சபதத்தை நீங்கள் எப்பொழுது நிறைவேற்றுகிறீர்களோ— தூமகேதுவின் உடல் பிணமாக எப்பொழுது தரையில் விழுகிறதோ— அந்த நல்ல நாளுக்கு அடுத்தநாளே மணக்கோலத்தில் எங்களை நீங்கள் பார்க்கலாம் என்று சொல்!"

இவ்வாறு நாணமடைந்த அஞ்சலையிடம் கனகசேனன் கூறியது, சோலையப்பனின் காதுகளில் வந்து ஒலித்தது.

"என் சபதம்!" என்று உரத்த குரலில் கத்திஞன்.

"பொன்னையா நான் வந்திருக்கிறேன்! மல்லிகை மாலை உனக்குச் சூட்டி, கைகூப்பித் தொழவும்— உன்னைக் கல்லறையில் சேர்த்த அந்தக் காதகனை — பாண்டிய நாட்டின் வைரியான அந்தத் தூமகேதுவை—வெட்டி வீழ்த்தி, அவனது இரத்தத்தைக்கொண்டு, உனது கல்லறையைக் கழுவுகிறேன் என்ற சபதத்தை எடுத்துக்கொள்ளவுமே வந்திருக்கிறேன்! கேள் நண்பனே; நன்ருகக்கேள்! அந்தச் சண்டாளஞ தூமகேதுவின் இரத்தத்தால், உன் கல்லறையைக் குளிப்பாட்டுகிறேன்!" என்று மயானத்தில் பொன்னையாவின் கல்லறையின் முன்பு எடுத்துக்கொண்ட சபதத்தை நினைவுப்படுத்திப் பார்த்ததும், 'தூமகேது! அடே வஞ்சகா, உன் முடிவுகாலம் நெருங்கிவிட்டது!" என்று ஆத்திரத்தோடு சொல்லிக்கொண்டே, உட்கார்ந்திருந்த இடத்தைவிட்டெழுந்தான்.

ஆத்திரத்தோடு சோலையப்பன் எழுந்த அதே நேரத்தில்—மதுரையில் தூமகேது உட்கார்ந்திருந்த ஆசனத்தைவிட்டெழுந்து, 'என்ன செய்தி மாரிமுத்து, என்னசெய்தி?' என்று பதைபதைப்போடு கேட்டான்.

"மோசம் போய்விட்டோம் ஒற்றர் நாயகமே, மோசம்போய்விட்டோம்!" என்று மாரிமுத்து சொல்லிவிட்டு, தலை குனிந்து கொண்டான்.

[வளரும்]

# தூங்குவது நல்லது!

********

ஒரு மனிதன் சமாதி நிலையை அடைய முடியுமானால், அவன் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் வாழக்கூடும் என்று ஒரு புகழ் பெற்ற உடற்கூறியலாளர் ஒரு முறை கூறினார். அது வேடிக்கையாகக் கூறப்பட்டதுதான் என்றாலும், அதிலும் ஒரு உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஒரு ஆண்டில் 9 மாதம் சமாதி நிலையிலிருப்பதால்தான் ஆமை நூற்றுக்கணக்கான ஆண்டுகள் உயிர்வாழ முடிகிறது என்று கூறப்படுகிறது.

மனிதனது உணர்வுபூர்வ வாழ்க்கையில் மூன்றில் ஒரு பங்காக அமைந்துள்ள தூக்கம் அவனது வாழ்க்கைக்கு இன்றியமையாதது ஆகும். இயற்கையில் காணப்படும் எல்லா உயிரினமும், தாவரமாயினும். பிராணியாயினும் மாறிமாறி செயற்தன்மையையும், ஓய்வு நிலையையுமே வாழ்க்கை நியதியாகக் கடைப்பிடிக்கின்றன. எளிய உயிர்ப் பொருளாயினும், மிக உயரிய பிராணியாயினும் தூக்கம் என்பது அவற்றிற்குத் தவிர்க்க முடியா ஒரு அவசிய நிலையாகும்.

தூக்கத்தின் காரணம் என்ன? அது எப்படி ஏற்படுகிறது? அதைக் கட்டுப்படுத்துவது எங்ஙனம்? தூக்கத்தின் காலம் எவ்வளவு ஆக இருத்தல் வேண்டும்? இவையெல்லாம் விஞ்ஞானிகளின் மனதைக் குழப்பிக்கொண்டுள்ள கேள்விகள்.

மனிதனது செயல் நிலையின் போது, அவனது உடலில் தோன்றும் ஒருவகை இரசாயனப்பொருள் அவனது மத்திய நரம்பு மண்டலத்தைப் பாதிப்பதால் அவனுக்கு உறக்கம் வருகிறது என்று சில விஞ்ஞானிகள் கருதுகின்றனர்.

தூக்ககாலம் எவ்வளவாக இருக்கவேண்டும்? தூக்கமின்மையால் ஏற்படும் தீய விளைவுகள் நமக்குத் தெரியும். எனினும் அதிகத் தூக்கத்திற்கு எந்தவித நியாயமும் கிடையாது என்பதுடன் அது தீமை தரத்தக்கதுமாகும். ஒரு மனிதனின் உடல், மன நிலையும், அவனுக்குத் தேவையான தூக்க அளவும் நேரடியாகத் தொடர்புள்ளவை.

உடல் ஆரோக்கியம் குறைந்தால், அதிகத் தூக்கம் தேவைப்படுகிறது. பலவீனமான உணர்வும்' குறைந்த அறிவு வளர்ச்சியுமுள்ளவர்கள் நீண்ட நேரம் தூங்குவர்; அறிவுத் துறையில் உழைக்கும் வயது வந்தவர்கள், குறைவான நேரமே தூங்குகின்றனர்.

சிறந்த உடற்கூறியலாளர்களின் கருத்துப்படி, தூக்ககாலத்தைவிட, தூக்கத்தின் தன்மையே முக்கியமானது. குறுகிய காலமேயெனினும், ஆழ்ந்த நித்திரை, பெரிதும் விரும்பத்தக்கது.

பலரும், டாக்டர்களின் ஆலோசனைப்படியோ அல்லது தாங்களாகவோ தூக்க மருந்துகளை உபயோகிக்கின்றனர்.

இவற்றை அடிக்கடி உபயோகிப்பதால், விளைவு நேர்மாறானதாகவும் ஆகக்கூடும்; அதாவது, அவர்களுக்கு தூக்கமில்லா நிலை ஏற்படக்கூடும், அல்லது அடிக்கடி தூக்கம் கலையும்.

வீயன்னு மருத்துவரான டாக்டர் கிளாஸ் ஹோல்ம் என்பார், ஒவ்வொருவருக்கும் தனது சொந்த தூக்க அளவு 'தெரிந்திருக்க வேண்டும் என்று கூறுகிறார். அனைவருக்கும் இது 7-8 மணி நேரமே இருக்கவேண்டும் என்பதில்லை. சிலருக்கு 9-10 மணி நேரமும் பிறருக்கு 5-6 மணி நேரமும் இருந்தால் போதுமானது, நடுத்தர வயதினருக்கும், வயோதிகர்களுக்கும் நண்பகல் தூக்கம் அவசியமானது என்று கருதுகிறார் அவர். நண்பகலில் தூங்கும்போதும், படுக்கையை நன்கு விரித்து இருட்டான அறையில், கவலைகளையும், எண்ணங்களையும் மறந்து தூங்குதல் அவசியம் என்பது அவரது கருத்து.

பிரிட்டிஷ் டாக்டரான ஆல்ஃப் பிரட்மாரோ என்பார் ஒரு சுவையான தகவலைத் தெரிவித்துள்ளார். ஒவ்வொருவருக்கும், அவரவர் பிறந்த நேரமே நல்ல தூக்க நேரமாக அமையுமாம். உதாரணமாக, நீங்கள் காலை 2 மணிக்குப் பிறந்திருந்தால். அதுவே உங்களுக்குச் சிறந்த தூக்க நேரமாகும்.

ஒரு மனிதனுக்கு வயதாக ஆக, அவனது சகஜமான தூக்ககாலம் குறைகிறது என்று சாதாரணமாக நம்பப்படுகிறது. ஆனால் சோவியத் அமெரிக்க விஞ்ஞானிகளின் ஆராய்ச்சிகளின்படி, உடற்கூறியல் ரீதியாக, ஒரு வயோதிகர் அதிக காலம் உறங்க வேண்டுமென்று தெரிகிறது. வயது முதிர்ந்தவர்கள் ஒரு நாளில் சராசரியாக 11—13 மணிநேரம் தூங்கினால், நீண்ட காலம் வாழமுடியும் என்கின்றனர் அவர்கள்.

பின்லந்துப் பழமொழி ஒன்று இங்கு குறிப்பிடத்தக்கது.

"இளைஞர்கள் சாப்பாட்டின் பின்னர் வலுவடைகின்றனர்;

முதியவர்கள் உறக்கத்தின் பின்னர் சக்தி பெறுகின்றனர்."

ஆகவே, அறிவார்ந்த முறையில் ஒழுங்கமைத்துக்கொள்ளும் தூக்கமே நமது ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதுடன் நமது சக்தி மூலங்களுக்கு ஒருவகை 'சேமிப்பு பாட்டரி'களாகவும் பயன்படுகின்றது. எவ்வளவுக்கெவ்வளவு 'சேமிப்பு' அதிகரிக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு இந்த 'வண்டி' நீண்டகாலம் ஓடும்.

—'உரிமைக்குரல்'


விரைவில்!

எஸ். எஸ். தென்னரசு

எழுதும்

## 'கண்ணுத்தாள்'

ஐம்பது ஆண்டுகளுக்குமுன் முகவை மாவட்டத்தில், செட்டி நாட்டுச் செம்மண் பூமியில், வாழ்ந்து மடிந்த ஒரு சுமங்கலியின் கண்ணீர்ப் பட்டயம்.

# மனமாற்றம்

## காட்சி 1.

இடம்:—அலெக்ஸாண்டரின் முகாம்.

இருப்போர்:—மாவீரன் அலெக்ஸாண்டர், டாலமி, காய்னாஸ், ஹோபஸ்டின் மற்றும் கிரேக்க வீரர்கள்.

[டாலமி வந்து அலெக்ஸாண்டரிடம் உரையாடுகிறான்]

டாலமி:- நண்பனே! வீரர்கள் அனைவரையும் அழைத்தீர்களாமே, ஏன்?

அலெக்ஸ்:- அருமை நண்பனே! வீரர்கள் அனைவருக்கும் சிந்தை குளிரும் செய்தி ஒன்று கூறப் போகிறேன்.

டாலமி:- (மகிழ்ந்து) அப்படியா? மிக்கமகிழ்ச்சி! (வீரர்களை நோக்கி) மாவீரர்களே! அமைதியாக இருங்கள். நமது தலைவர் அலெக்ஸாண்டர் தித்திக்கும் செய்தி ஒன்று கூறப்போகிறார்.

[அலெக்ஸாண்டர் எழுந்திருக்கிறான். வீரர்கள் மகிழ்ச்சி மிகுதியால் கையொலி எழுப்புகின்றனர், அலெக்ஸாண்டர் ஒரு கையை உயர்த்துகிறான். கூட்டத்தில் அமைதி ஏற்படுகிறது]

அலெக்ஸ்:- வாழ்க கிரேக்கம்! பார் புகழும் கிரேக்க மாவீரர்களே! ஏர்முனைக்கு எதிரியின் வாள் முனையை ஈந்த ஏற்றமிகு தளபதிகளே! பொன் ஏடாம்—புகழ் வீடாம்—பண்டை நாடாம் கிரேக்கம், பாராளும் புனித வாய்ப்பை ஏற்படுத்த எட்டாண்டுகளுக்கு முன்பு வாளும் வேலும், வீரத்தையும் விவேகத்தையும் ஏந்திப்போர் முனைக்குப் புறப்பட்டோம். சொல்லொணாத் துயரங்களைச் சந்தித்தோம், தூசெனக் கருதினோம் அவைகளை; வெல்லவொணாத எல்லைகளை எண்ணவொணா முறையில் தூள், தூள் ஆக்கினோம்! நமது தாயகம் பூரிக்க—பார் முழுதும் வியக்க—எதிரிகள் தவிக்க — மண்டலாதிபதிகள் துடிக்க — வேற்றரசர்களின் இதயங்களில் வேலைப் பாய்ச்சினோம்; கோட்டைகளில் வெற்றிக் கொடியை நாட்டினோம்! நீங்கள் காட்டிய வீரமும் ஈட்டிய வெற்றியும் கொஞ்சமா? அவைகளை சொல்லால் வடிக்கமுடியுமா? முடியாது! உங்களது வற்றாத அன்பால், குன்றாத வீரத்தால், மாற்றரசர்களைக் கொன்று வென்று

முல்லை. தென்னவன்

அவர்களது எலும்புகளைச் சிம்மாதனச் சட்டமாக்கி—நரம்புகளால் இருக்கை பின்னி — சதைக் கோளங்களைத் திண்டுகளாக்கி—குருதியால் செந்நிற வண்ணம் பூசி — அந்த அரியாசனத்தில் என்னை அமர்த்தி; மாற்றரசர்களின் மண்டையோடுகளை மகுடமாக்கி — கருநீலவிழிகளை வைரக் கற்களாக்கி—அவைகளை மகுடத்தில் பதித்து எனக்கு அந்த மணி மகுடத்தைச் சூட்டி மகிழ்ந்தீர்கள். நான் மாற்றரசர்களின் மகுடம் பறிப்பவனாகவே இருக்க விரும்புகிறேன்; மகுடம் தாங்கியாக அல்ல! மாவீரன் மாவீரனாகத்தான் இருக்க விரும்புவான். அதனால்தான் உங்களில் ஒருவனாக—மாவீரனாக உலக எல்லையில் உலா வந்திருக்கிறேன். புலியெனப் போரிட்டோம், புகழ் நாடுகள் பல நம் காலடியில்! டான்யூப் முதல் சிந்துவரை வீரத்தால் நமது எல்லைகளைப் பரப்பியிருக்கிறோம். இல்லை! இல்லை!! இரத்த வெள்ளம் பாய்ச்சி வளர்த்திருக்கிறோம்!

அதேபோல, மங்காப் புகழ்மிக்க மகதத்தை—தங்கநிகர் அங்கத்தை—அறிவுப் பண்பாடும் பாடலிபுரத்தை — ஆளச் சிறந்த மாளவத்தை — வீரத்தின் அங்கமாம் வங்கத்தை—களிதுள்ளும் கலிங்கத்தை—முக்கடல் சூழ்ந்த தென்னகத்தை—அதில் முத்து விளையும் பாண்டியநாட்டை — மலைபடு பொருள்கொண்ட சேரநாட்டை—எந்நாளும் செந்நெல் விளையும் சோழநாட்டை.......இவைகளின் எல்லைகளைக் கலைத்து ஏக நாடாக்குவோம். இந்தப்புதிய நாட்டிற்கு புதிய எல்லை கண்டு, அதில் நமது வாள் முனைகளால் அலங்கரித்து, அழகிய வேல்முனைகளால் அகழிகள் தோண்டி, ஈட்டி முனைகளால் அரண் எழுப்பி, வெற்றிக்கொடிகளால் விதானம் அமைத்து புனித நாடாம் கிரேக்கத்தின் புகழ்பாடும் அடிமை நாடாக்குவோம். அந்தப் புகழால் உங்களைப் பூரிக்கச் செய்யவேண்டும் என்பதே எனது பேரவா! அதற்கான ஆரம்ப விழாவின் தொடக்கமாக, மகதத்தை நோக்கி நாளை நமது படை புறப்படட்டும்!

வாழ்க கிரேக்கம்! வெல்க வீரம்!

[அலெக்ஸாண்டரின் உணர்ச்சி முழக்கத்தைக் கேட்டு வீரர்கள் கையொலி

எழுப்பவில்லை; போர் முழக்கம் செய்யவில்லை. இந்தப் புதிய மாற்றத்தைக் கண்டு அலெக்சாண்டர் திகைப் படைகிருன்]

அலெக்ஸ்:- (திகைத்து) வீரர்களே! எங்கே உங்கள் எழுச்சிமுழக்கம்? எங்கே உங்கள் எழிலார்ந்த தோற்றம்? ஏன் இந்த அமைதி? வீரம் துள்ளும் முகத்தில் சோர்வு ஏன்? ஏன்? நாம் தோற்றுவிடுவோமே என்ற ஐயப்பாடா? அந்த ஐயப்பாடு தேவையே இல்லை! நாம் பல்லாயிரம் மைல்களில் மன்னர் மன்னர்களாகத்தான் பவனி வந்தோமே தவிர, தோற்றேடியதில்லை; புறமுதுகு காட்டியதில்லை; போருக்குச் சலித்தோமில்லை! ஏன், எதிரியின் வாளும் ஈட்டியும் நமது உடலைத் தீண்டியதே இல்லை. இனியும் இதில் மாற்றம் ஏற்படப்போவதில்லை. நமக்குத்தான் வெற்றி! அதனுல் உங்கள் போர் முழக்கத்தை எழுப்பி, என்னைப் பூரிக்கச் செய்யுங்கள்.

[வீரர்கள் அமைதியாகத் தலைகுனிந்து நிற்கின்றனர்.]

என்ன? முடியாதா? உங்கள் இதயம் கவர்ந்த தலைவனை அவமதிக்கிறீர்கள்! உங்களுக்கு என்ன ஏற்பட்டுவிட்டது. விபரத்தைச்சொல்லுங்கள். ஒருவரும் பேசமாட்டீர்களா? ஆ...காயனுஸ்! நீ சொல்.

[காயனுஸ் தலைகுனிந்து கொள்ளுகிருன்]

அலெக்ஸ்:- ஹேபேஸ்டியஸ்...

[அவனும் தலைகுனிந்து கொள்ளுகிருன்.]

அலெக்ஸ்: டாலமி...

டாலமி:- வீரர்கள் தாயகம் திரும்ப விரும்புகிருர்கள்.

அலெக்ஸ்:- (திகைத்துக் கோபத்துடன்) என்ன?போருக்குப்பயந்துவிட்டார்களா? கோழைகளாக மாறிவிட்டார்களா? புகழ் மணக்கும் கிரேக்கமே! உலகின் முன், மாவீரனுகிய உன் மகனைக் கோழையிலும் கோழை என்று கெக்கெலி செய்யும் இழிநிலைக்குக் கொண்டுவந்துவிட்டார்கள். ஆ... ...இந்த நிலைக்கு என்னை நான் மாற்றிக்கொள்ள மாட்டேன். நானேயே நமது படை மகதம் நோக்கிப் புறப்படட்டும்.

[வீரர்கள் தலைகுனிந்து கலைந்து செல்லுகின்றனர். டாலமி மட்டும் நிற்கிருன். அலெக்ஸாண்டர் வெறிகொண்டு துள்ளுகிருன்.]

ஆ...என் கட்டளைக்கு மறுப்பா? கோழைகளே! உங்களை என்ன செய்கிறேன், பார்!

[தொடைகளையும் மார்பகத்தையும் வெறியுடன் தட்டிக்கொண்டு, 'கோழைகள்! கோழைகள்!!' என்று கூவுகிருன்.]

டாலமி:- அலெக்ஸாண்டர், அலெக்ஸாண்டர்!

அலெக்ஸ்:- இல்லை; கோழைகளுக்குத் தலைவன்! அதனுல் நானும் ஒரு கோழை! நான் ஏன் வெறிகொண்டு துள்ளவேண்டும்! குட்டுபவனுக்குக் குனிந்து கொள்பவன் கோழை! அவனைப் போலவே இருக்க முயல்வேன்; ஆம்; இருக்க முயல்வேன்.

[அலெக்ஸாண்டர் சிலைபோல் அசையாமல் நிற்கிருன். டாலமி அசைக்கிருன். அவனுல் அசைக்க முடியவில்லை; பெருமூச்சு விடுகிருன்.]

## காட்சி 2.

இடம்:—மருத்துவன் பிளப்ஸ் இல்லம்.

இருப்போர்:— டாலமி, வைத்தியன் பிளப்ஸ்.

டாலமி:- பிளப்ஸ்! அலெக்ஸாண்டரின் மனநிலை எப்படி இருக்கிறது?

பிளப்ஸ்:- மருந்துகளால் அவர் மனநிலையை மாற்ற முடியாது. இந்த மனநிலை நீடித்தால் பைத்தியமாகி விடுவார்.

டா:- (திகைத்து) ஆ...அப்படியா? அதற்கு என்ன செய்வது?

பிள:- அவர் மனநிலையை நீங்கள் மாற்ற முயலவேண்டும்; இல்லையேல், அவர் விருப்பம்போல் நீங்கள் நடக்கவேண்டும்.

டா:- (சிந்தனையுடன்) போருக்குச் செல்வதா? வீரர்கள் அனைவரும் களைத்துவிட்டனர். அவர்களுக்கு ஓய்வு தேவை.

பிள:- இந்தக் காரணத்தை மன்னருக்குச் சொல்வதுதானே! ஒரு வேளை மனம் மாறினுலும் மாறுவார்.

டா:- முயற்சிக்கிறேன். என் முயற்சியில் தோற்ருல், அலெக்ஸாண்டர் விருப்பப்படி மகதத்தின்மீது போர் தொடுப்போம். மாவீரன் அலெக்ஸாண்டரைப் பைத்தியமாகப் பார்க்க நான் சம்மதிக்க மாட்டேன். வருகிறேன்.

[டாலமி வெளியேறுகிருன்.]

## காட்சி 3.

இடம்:- அலெக்ஸாண்டர் முகாம்

இருப்போர்:- அலெக்ஸாண்டர், டாலமி, காய்னுஸ், கிரேக்க வீரர்கள்.

[அலெக்ஸாண்டர் பித்தனைப்போல் பிதற்றிக்கொண்டிருக்கிருன். கிரேக்க மாவீரர்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர்.]

அலெக்ஸ்:- ஆ...! என் வீரர்கள் கோழைகளாக மாறிவிட்டனர். படையெடுப்பைக் கண்டு பதைக்கின்றனர். அய்யோ...நான் கண்ட வெற்றியில் களங்கக் கறையை ஏற்றிவிட்டனர். உலக நாடுகள் என்னை எள்ளி நகையாடும் நிலைக்குக் கொண்டுவந்து விட்டனர். இனியும் நான் உயிர் வாழ வேண்டுமா? கூடாது! கூடாது!!

[கல்லில் மோதிக்கொள்ள முயல்கிருன். டாலமி தடுக்கிருன்.]

தடுக்காதே டாலமி! என் எண்ணமெல்லாம் மின்னல்போல் மறைந்துவிட்டது. என் ஆசையெல்லாம் அடியோடு நசிந்துவிட்டது! எல்லாமே அழிந்துவிட்டது! அழிந்துவிட்டது!

டாலமி:- என்னருும் நண்பனே! நீ என்னகூறுகிருய்என்பதையாவது உணர்கிருயா?

அலெக்ஸ்:- உணர்கிறேன் டாலமி, உணர்கிறேன். நான் உணர்ந்ததுபோல் நீங்கள் உணர்ந்தீர்களா? இல்லை! இல்லை! உணர்ந்திருப்பீர்கள். என் சுயநலத்திற்காகவா அந்தக் கோலம் பூண்டேன்? இல்லை! இல்லை! என் எழில் நாடாம் கிரேக்கம் இடைக்காலத்தில் ஏற்றமிழந்து, எழில் குன்றி, புகழ் மறைந்து, திருவிழந்துவிட்டது! அதைத்திருத்தி புதியபொலிவும் வலிவுமிக்கத்

---

முகப்பில்:

மதுரை மாவட்ட
சட்டமனற உறுப்பினர்கள்
கோவிந்தராசன், (மத்திய) மதுரை
கே. கிருஷ்ணமூர்த்தி, பழனி.
வி. எஸ். எஸ். மணி, ஆத்தூர்.

திருநாடாக்க முயன்றேன். அதனுல்தான் பாரசீகத்தில் கிட்டிய வெற்றியை நீடித்த நிலைக்குக் கொண்டுவர, ஜுவாஸ் அம்மனின் திருப்புதல்வன் வேடம் தாங்கினேன். ஆனுல் நீங்களோ ......சாக்ரடீசின் தத்துவத்திற்கும் கிரேக்க நாகரிகத்திற்கும் முரணுகச் சென்றவன் என்ற குற்றச் சாட்டை என்மீது சுமத்தினீர்கள் உலகிலேயே கிரேக்க நாகரிகத்தைப் பரப்ப, கிரேக்கக் கலையைப் பின்பற்றி 76 எழில் நகரங்களைச் சமைத்தேன். அப்பொழுதாவது என்னைப் புரிந்துகொண்டீர்களா? (பெருமூச்சுடன்) புரிந்துகொள்ளவேயில்லை......!

காய்னுஸ்:- (கோபத்துடன்) யார் புரிந்துகொள்ளவில்லை; நீ....நீ...!

அலெக்ஸ்:- (கோபத்துடன்) காய்னுஸ்......!

காய்னுஸ்:- (இகழ்ச்சியாக) எரிமலை போல் குமுறினுலும் எனக்குக் கவலையில்லை. எங்கள் இதயக் குமுறல்களை இன்று வெடிக்கச் செய்யப்போகிறேன். ஆம்; வெடிக்கச் செய்யப்போகிறேன். நாங்கள் உன்னைப் புரிந்துகொள்ளவில்லையா? (வேதனையுடன்) இப்படிக் கூறுவது உங்களுக்கேவேடிக்கையாக இல்லை! நாங்கள் உங்களைப் புரிந்துகொண்டதால், எங்கள் ஒத்துழைப்பைத் தந்து, பாரசீகத்தை—பாபிலோனை — ஆசியா மைனுரை — எகிப்தை — காபூலை — சிந்துநதி தீரத்தை வெற்றி கொள்ளவில்லையா? நாங்கள் உன்னைப் புரிந்துகொண்டதுபோல், எங்கள் உள்ளத்தை—உணர்வை —நிலையைப் புரிந்துகொண்டாயா?

டாலமி:- (குறுக்கிட்டு) அமைதி கொள், காய்னுஸ்!

அலெக்ஸ்:-(வியந்து) என்ன? நான் உங்களைப் புரிந்துகொள்ளவில்லையா?

காய்னுஸ்:-ஆம்; புரிந்துகொள்ளவேயில்லை. இவனைப் பாருங்கள். (எலும்பும் தோலுமாய் நின்ற ஒருவனைச் சுட்டிக்காட்டி) ஆலையிலிட்ட கரும்புபோல் ஆகிவிட்டான், இவன்! சாலையில் நிற்கும் எழில் மரம்போல் எட்டாண்டுகளுக்குமுன், இவன் இருந்தான்; எலும்புக்கூடாக மாறிவிட்டான், இன்று! இந்நிலை இவனுக்கு எப்படி ஏற்பட்டது? அதையாவது புரிந்துகொண்டீர்களா?

அலெக்ஸ்:- (திகைத்து) ஏன்? ஏன்?

காய்னுஸ்:- எழில் நாடாம் கிரேக்கத்தை என்று காண்போமோ என்ற ஏக்கத்தால்......

[குழி விழுந்த கண்களையுடையவனைச் சுட்டிக் காட்டி]

புலிவாழ் குகைபோல் இவனுடைய கண்கள் ஒளி இழந்து குழிகளாக மாறிவிட்டன! ஏன் இந்த நிலை இவனுக்கு? தாயற்றக் குழந்தைகளைத் தாயகத்தில் விட்டுவிட்டு பொன்னுட்டிற்கு புகழ் சூட்ட போர்க்கோலம் பூண்டான். இவனுடைய குழந்தைகளின் நிலை என்னவாகியது என்ற மனத்துடிப்பால் இவனுடைய கண்கள் ஒளியை இழந்தன; குகைகளாகின. இந்தக் குழிக்கண்களில் குடியிருப்பது பாசத்தின் பெருமூச்சு! பாசத்தின் பெருமூச்சு!

அலெக்ஸ்:- அய்யோ...அப்படியா!

[கண்ணீர் சிந்தும் ஒருவனைக் காட்டி......]

காய்னுஸ்:- இவனுடைய கண்களிலிருந்து உதிருவது கொற்கை முத்துக்கள் அல்ல! கொண்டவளைப் பிரிந்ததினுல் ஏற்பட்ட ஏக்கத்தின் பிரதிபலிப்பு; கண்ணீர்துளிகள்! கண்ணீர்துளிகள்!

அலெக்ஸ்:- (அதிர்ச்சியுடன்) ஆ...

காய்னுஸ்:- (இழிவுக் குரலில்) இது ஒரு நடைப்பிணம்! செல்வத்தைச் சுமக்கும் நடைப்பிணம்! பணம் என்றுல் பிணமும் வாய்பிளக்கும்; இந்த நடைப்பிணம் பணத்தைப் பெற்றும் அனுபவிக்க முடியாத விசித்திர நடைப்பிணம்!! அதே ஏக்கத்தால் உயிரைவிடப் போகும் வருங்காலப் பிணம்! இவர்கள் போன்றவர்கள் உங்களால் மீண்டும் மீண்டும் அடிமைப்படுத்தப்படுகிருர்கள்.

அலெக்ஸ்:- (வியப்புடன்) என்ன? நான் இவர்களை அடிமைப்படுத்துகிறேனு? (பெருங்குரலில்) இல்லை! இல்லை! புகழுக்குச் சொந்தக்காரர்களாக மாற்றுகிறேன்.

காய்னுஸ்:- இருக்கும் புகழ் போதாதா? உடல் நலம் கெட்டு; உள்ளம் சோர்ந்து, என்று தாயகம் திரும்புவோம் என்ற ஏக்கம் கொண்ட இவர்களால் எழுச்சியுடன் போர்புரிய முடியுமா? இருக்கும் புகழினை இழக்கத்தான் செய்வார்கள். தன் படை வலிவு அறிபவனே மாவீரனுவான்; வெற்றிவீரனுவான்! இவர்கள் இப்பொழுது விரும்புவது புகழை அல்ல; ஓய்வு! ஓய்வு! அது அவர்களுக்குக் கிடைத்தால் உலகையே உங்கள் திருவடிகளில் காணிக்கையாக்குவார்கள்.

வீரர்கள்:- ஆம், ஆம்! உலகையே காணிக்கையாக்குவோம்.

[அலெக்ஸாண்டரின் வேதனை கப்பிய முகம் மகிழ்ச்சியால் மலர்கிறது; மனம் மாறுகிறது.]

அலெக்ஸ்:- காய்னுஸ்! புரிய முடியாத நிலையிலிருந்த என்னைப் புரிந்துகொள்ளும்படி செய்துவிட்டாய்! என்னருமை நண்பனே! இவர்களுடைய உள்ளத்தை உணர்வை புரிந்துகொண்டேன். நாளையே தாயகம் திரும்புவோம்.

வீரர்கள்:- (மகிழ்ந்து)அலெக்ஸாண்டர் வாழ்க! கிரேக்கம் வாழ்க! ஓய்வு பெற்றுத் திரும்பியவுடன், உலகையே உங்கள் காலடியில் சேர்ப்போம். கிரேக்கத்தின் மீது ஆணை!

அலெக்ஸ்:- (உற்சாகத்துடன்) இடி முழக்கம் போன்ற உங்கள்எழுச்சி முழக்கத்தைக் கேட்டேன். அவைகளே எனக்குத் தேன்துளிகள்! இழந்த பொலிவை உங்கள் முகத்தில் திரும்பக் காண்கிறேன். உற்சாகத்தால் உங்கள் ஒட்டிய உடலங்கள் பூரிப்பதைக் காண்கிறேன் உங்கள் மகிழ்ச்சியே என் மகிழ்ச்சி! டாலமி! நாளை திரும்புவதற்குத் தேவையான ஏற்பாட்டைச் செய். வாழ்க கிரேக்கம்!

●

ஆசிரியர், வெளியிடுபவர் சி. என். ஏ. இளங்கோவன் அவர்களால், சின்னகாஞ்சிபுரம் 86, திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

27-8-67